பருவவெளியீட்டுப்பகுதி
யாழ்ப்பாண பொதுநூலகம்

ISSN 1391-9504

# விஜய்

Vijey විජය

06.09.2017 - மலர் 14, இதழ் 28

## பூமி சுற்றாவிடின் என்ன ஆகும்?





இருமலைத் தடுப்போம்...

மாணவர் காப்புறுதி: அமைச்சரவை அங்கீகாரம்

கூட்டுறவுச் சங்கம் உருவான வரலாறு



## பூந்தல தேசிய சரணாலயம்

விலை ரூபா 15/-

மாணவர்களுக்கான அறிவுசார் வாரப்பத்திரிகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குப்பைகளுக்கு தனி அதிகாரசபை

குப்பைகள் தொடர்பான நடவடிக்கைகளை முன்னெடுக்கும் முகமாக மத்திய குப்பை முகாமைத்துவ அதிகாரசபை ஒன்றை நிறுவுவதற்கான தேவை ஏற்பட்டுள்ளதாக மாநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

இந்த உத்தேச யோசனையினை ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் சமர்ப்பித்துள்ளதாகவும், குப்பைகள் தொடர்பான அனைத்து அதிகாரங்களையும் அந்த அதிகார்சபைக்கு வழங்குவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். அத்துடன், பொதுமக்கள் குப்பைகள் பற்றிய தகவல்களை அறிந்துகொள்ளவும் தெரியப்படுத்தவும் 1917 எனும் துரித இலக்கத்தை எதிர்வரும் காலத்தில் அறிமுகம் செய்யவுள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.




தற்பொழுது குப்பை முகாமைத்துவம் சரியான முறையில் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும், எதிர்வரும் காலங்களில் குப்பைகளை அகற்றும் லொறிகள் மூலம் உரிய பணிகள் சரிவர மேற்கொள்ளப்படுகின்றனவா என்பதனை இலக்ட்ரொனிக் அடிப்படையில் கண்காணிக்கவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# மின் வாகனங்களை பயன்படுத்துவதில் ஆர்வம் காட்டுவோம்

உலகில் அபிவிருத்தி அடைந்த பெரும்பாலான நாடுகள் எதிர்வரும் காலத்தில் மின் வாகனங்களைப் பயன்படுத்தக்கூடிய சாத்தியங்கள் அதிகம் உள்ளதாக தெரிவிக்கப்படுகின் றது. சூழல் பாதுகாப்பு குறித்து அதிக அக்கறை கொண்டே, மின்சாரத்தில் இயங்கும் இத்தகைய வாகனங்களின் பயன்பாட்டினை அதிகரிப்பதற்கு அந்த நாடுகள் நடவடிக்கை எடுத்து வருகின்றன.



மின்சாரத்தில் இயங்கும் வாகனங்களை பயன்படுத்துவதில் ஆர்வம் காட்டும் நாடுகளில் ஒன்றுதான் ஜப்பான். அந்த வகையில், தற்போது ஜப்பானில் மின் வாகனங்களை 'சார்ஜ்' செய்யும் நிலையங்கள் அதிகரித்துள்ளன. எரிபொருள் நிரப்பு நிலையங்களைவிட இந்த நிலையங்களின் எண்ணிக்கை அதிகமாகும். தொழில்நுட்ப வளர்ச்சி மிக்க நாடுகளில் ஒன்றான ஜப்பான், மற்றைய நாடுகளுக்கு முன்னுதாரணமாக பசுமை எரிசக்தியினை நோக்கிய பயணத்தினை ஆரம்பித்துள்ளது. பசுமை எரிசக்தியை பயன்படுத்தி இயங்கக்கூடிய வாகனங்களை உற்பத்தி செய்யும் எண்ணிக்கையும் ஜப்பானில் அதிகரித்துள்ளது.



இத்தகைய வாகன பயன்பாட்டினால் சூழல் மாசடைவதையும் தவிர்த்துக் கொள்ளலாம். எனவே, இலங்கையிலும் மின் வாகனங்களைப் பயன்படுத்த நாம் முன்வர வேண்டும்.

# ஆதிவாசிகளின் பொறுப்புகளை ஏற்பதற்கு அமைச்சு தேவை

இலங்கையில் வாழும் ஆதிவாசிகள் பற்றிய பொறுப்புகளை அமைச்சு ஒன்றிடம் கையளிக்க வேண்டும் என்று ஆதிவாசிகளின் தலைவர் ஊருவரிகே வன்னியலெ எத்தோ குறிப்பிட்டுள்ளார்.



அரசை அசௌகரியப்படுத்தும் செயற்பாடுகளில் இலங்கை ஆதிவாசிகள் ஈடுபடப்போவதில்லை. எனவே, அரசு இது பற்றி புரிந்து செயற்பட வேண்டும் என்று வன்னியலெ எத்தோ குறிப்பிட்டுள்ளார்.



தம்பான- மொரபெத்தேயில் நடைபெற்ற ஆதிவாசிகள் தின நிகழ்வுகளில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தொடர்ந்து உரையாற்றிய அவர்; "இன்று பல அமைச்சுக்கள் இருந்தாலும், ஆதிவாசிகள் தொடர்பான நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு பிரத்தியேக அமைச்சு ஒன்று இல்லை. எம்மைப் பற்றி நாமே பேசிக் கொண்டிருக்கின்றோம். நாம் இதற்கு முன்பும் இந்த யோசனையை முன்வைத்திருந்தோம். ஆதிவாசிகள் என்பது ஒரு நாட்டின் ஆபரணங்கள். எனவே, எமது கோரிக்கைகளை பரிசீலித்துப் பார்க்க வேண்டியது அரசின் கடமையாகும். எம்மை மட்டும் அரசாங்கம் ஏன் துச்சமாக மதிக்கின்றது என்பது புரியவில்லை" என்று மேலும் தெரிவித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

பருவவெளியீட்டுப்பகுதி யாழ்ப்பாண பொதுசனநூலகம்

# யால தேசிய வனம்
# இரண்டு மாதங்கள் மூடப்பட்டிருக்கும்...!



ல தேசிய வனம் செப்டெம்பர் 1 ஆம் திகதி தொடக்கம் ஒக்டோபர் 30 ஆம் திகதிவரை இரண்டு மாத காலத்திற்கு மூடப்பட்டிருக்கும் என வனவிலங்குகள் பாதுகாப்பு திணைக்களம் அறிவித்துள்ளது.

இக்காலப்பகுதியில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப்பயணிகளுக்கு இந்த வனத்தை பார்வையிட அனுமதி வழங்கப்படமாட்டாது.

விலங்குகளின் இனப்பெருக்க திட்டமிடல்கள் மற்றும் உள்ளக போக்குவரத்து அபிவிருத்திப் பணிகள் ஆகிய காரணங்களை முன்னிட்டே, மேற்படி யால தேசிய வனம் மூடப்படுவதாகவும் குறிப்பிடப்படுகின்றது. மேலும், நாட்டில் நிலவுகின்ற கடும் வறட்சியை கருத்தில் கொண்டு விலங்குகளுக்கான தண்ணீர் வசதிகளுக்கான வழிவகைகளும் இந்த காலப்பகுதிக்குள் மேற்கொள்ளப்படவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# மாணவர் காப்புறுதிக்கு அமைச்சரவை அங்கீகாரம்



டசாலை மாணவர்களுக்கான இலவச காப்புறுதி வழங்கல் திட்டத்திற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. நாடளாவிய ரீதியில் 10,022 பாடசாலைகளுக்கு மொத்தமாக 2,700 மில்லியன் ரூபா பெறுமதியான மேற்படி காப்புறுதி திட்டத்திற்கான யோசனையை கல்வித்துறை அமைச்சு முன்வைத்திருந்தது.

5 தொடக்கம் 19 வயது வரையிலான (தரம் 1 தொடக்கம் 12 வரை) சகல மாணவர்களும் இந்த இலவச காப்புறுதி திட்டத்தில் உள்வாங்கப்படவுள்ளனர். இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தினூடாகவே, மேற்படி திட்டம் செயற்படுத்தப்படவுள்ளது. இதற்கமைய, ஒவ்வொரு மாணவரும் வெளிநோயாளர் சிகிச்சைக்கு 10 ஆயிரம் ரூபா வரையிலும், தனியார் மருத்துவமனைகளில் மேற்கொள்ளும் சிகிச்சைக்கென 1 லட்சம் ரூபாவும் காப்புறுதி நிதியை பெற முடியும்.

விஜய்
விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்
08, ஹுணுப்பிட்டிய குறுக்கு வீதி
கொழும்பு -02
தொலைபேசி 2479653
மின்னஞ்சல்: vijey@wijeya.lk
ஃபெக்ஸ்: 011-2479652

# டெங்குவை ஒழிக்க மாணவர் பதிவு அட்டை




டசாலை மாணவர்களிடத்தில் டெங்கு குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில் மத்திய மாகாணத்தில் உள்ள பாடசாலை மாணவர்களுக்கு பதிவு அட்டை ஒன்றை அறிமுகம் செய்வதற்கு மத்திய மாகாண கல்வி அமைச்சு ஏற்பாடுகளை செய்துள்ளது.

மேற்படி, பதிவு அட்டையில் சில விபரங்கள் குறித்தான பதிவுகளை மேற்கொள்ளுமாறு மாணவர்கள் அறிவுறுத்தப்படவுள்ளனர்.

பிளாஸ்டிக் பொருட்களை அழித்தமை, சுற்றுச் சூழலை சுத்தம் செய்தமை, தண்ணீர் தேங்கும் இடங்களை சுத்தமாக்கியமை, மீள் சுழற்சி செய்தமை போன்ற அன்றாட செயற்பாடுகளை மாணவர்கள் கட்டாயமாக பதிய வேண்டும்.

இந்த பணியில் மாணவர்கள் ஈடுபாடு காட்டும் அளவிற்கு இந்த பதிவு அட்டையில் விபரங்கள் பதியப் படும். இதன்மூலம் மாணவர்கள் டெங்கு குறித்தான விழிப்புணர்வை பெறுவர் என எதிர்பார்க்கப் படுகின்றது.




# சிறந்த பாடசாலை சஞ்சிகை தெரிவுப் போட்டி



பாடசாலை மாணவர்களின் ஆக்கபூர்வமான படைப்பாற்றல்கள் மற்றும் ரசனை, திறன் ஆகியவற்றை மேலும் விருத்தி செய்து திறமைமிகு எதிர்கால சந்ததியொன்றை உருவாக்கும் நோக்கில் கல்வி அமைச்சும், கலாசார அலுவல்கள் திணைக்களமும் ஒன்றிணைந்து முன்னெடுக்கும் இளங்கதிர் பாடசாலை கலாசார வேலைத்திட்டத்தின் கீழான பாடசாலை மாணவர்களுக்கான சிறந்த பாடசாலை சஞ்சிகையை தெரிவு செய்யும் போட்டி.....

## போட்டி விதிமுறைகள்

இந்தப் போட்டியில் எந்தவொரு பாடசாலையும் கலந்து கொள்ளமுடியும். 2017 ஆம் ஆண்டுக்கென தயாரிக்கப்பட்ட ஆண்டு அல்லது அரையாண்டு பாடசாலை சஞ்சிகையை இப்போட்டிக்கென முன்னெடுக்கமுடியும். மாவட்ட மட்டத்தில் முதலாம், இரண்டாம், மூன்றாம் இடங்கள் தெரிவுசெய்யப்படவுள்ளது. மொத்தமுள்ள 25 மாவட்டங்களிலும் முதல் இடத்தைப் பெற்ற 25 சஞ்சிகைகளுள் முதல் மூன்று இடத்தைப் பெறும் சஞ்சிகைகள் தெரிவு செய்யப்பட்டு அவற்றிற்கு தேசிய மட்டப் போட்டியில் சான்றிதழ்கள், பரிசுகள் வழங்கப்படும். அத்துடன் பாராட்டுச் சான்றிதழ்களும் வழங்கப்படும். விண்ணப்பப்படிவத்துடன் உரிய சஞ்சிகையும் எமக்கு அனுப்பப்படல்வேண்டும்.

## நிபந்தனைகள்

01. பாடசாலை மட்டத்தில் இப்போட்டியில் பங்குபற்றமுடியும்.
02. மாணவர்களின் சஞ்சிகையை சமர்ப்பிக்க முடியும்.
03. ஆண்டு அல்லது அரையாண்டு பாடசாலை சஞ்சிகையை இதற்கென சமர்ப்பிக்க முடியும்.
04. கையெழுத்துப் பிரதி வடிவிலான சஞ்சிகைகளையும் சமர்ப்பிக்கமுடியும்.
05. உங்கள் பாடசாலைக்கு உரித்துடைய பிரதேச செயலகத்திலோ அல்லது மாவட்ட செயலகத்திலோ உள்ள கலாசாரப் பிரிவு உத்தியோகத்தரிடம் கையளிக்க முடியும்.
06. போட்டி முடிவுத் திகதி 2017 ஒக்டோபர் 15



விஜய்

இளங்கதிர் பாடசாலை கலாசார வேலைத்திட்ட பாடசாலை சஞ்சிகைப் போட்டி
மாதிரி விண்ணப்பப்படிவம்

01. முதலெழுத்துகளுடன் பெயர்.....................
02. பாடசாலை :.....................
03. பாடசாலை முகவரி :.....................
04. பாடசாலை தொலைபேசி :.....................
05. மாவட்டம் :.....................
06. பிரதேச செயலகம் :.....................
07. சஞ்சிகையின் பெயர் :.....................

மேற்குறிப்பிட்ட விபரங்கள் உண்மையெனவும் சரியானவை எனவும் இங்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ள ஆக்கம் என்னால் தயாரிக்கப்பட்ட ஆக்கம் என்பதையும் உறுதிப்படுத்துகின்றேன்.

.................................... ....................................
மாணவர் பெயர் கையொப்பம்

எமது பாடசாலையினால் தயாரிக்கப்பட்ட மேற்குறிப்பிட்ட சஞ்சிகையுடனான போட்டி விண்ணப்பத்தை உறுதிப்படுத்தி சமர்ப்பிக்கின்றேன்.

அதிபரின் பெயர்:....................................
கையொப்பம் :.....................
பதவி முத்திரை :..................... திகதி:.....................


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு மிருகத்தின் உறுமும் ஓசை அவர்களருகே கேட்டது. வர்ஷா பயத்தில் வினித்தின் கையை இறுகப் பிடித்துக் கொண்டாள். மீண்டும் அந்த ஓசை மிக அருகிலிருந்து கேட்டது.

# வினித்தின்மேல் பாய்ந்த மிருகம்

## கால இயந்திரம் 06

-ஜெ.விபாகர்

"என்ன அது...!?"

திடீரென செடிகளுக்குள் மறைந்து கிடந்த ஓர் உயிரினம் அவர்களின் முன் பாய்ந்து வந்து நின்றது. அதன் கூரிய பற்கள் வாயை விட்டு நீண்டு, அவர்களை பயமுறுத்தியது. நால்வரும் மெதுவாக அதற்கு எதிர்புறம் அசைந்தனர். அவர்கள் சற்றும் எதிர்பார்க்காத விதத்தில், அதே போன்ற இன்னொரு உயிரினமும் அவர்கள் முன் வந்து முறைத்தபடி உறுமியது.



"டேய்...! என்ன மிருகம் டா இது...!?!?"

அது ஒரு நாயினையும், சிறுத்தையையும் கலந்து செய்த கலவை போல இருந்தது. முதுகில் பாதி வரை கறுப்பு நிற வரிகள் இருந்தன.

"நான் 'சூ'(Zoo) ல கூட பார்த்ததில்ல..."

"இதெல்லாம் மியூசியத்துல தான் பார்க்க முடியும்!"

"என்னடா சொல்றே...??"

"இதெல்லாம் அழிஞ்சு போன மிருகம் டா..."

இரண்டு மிருகங்களும் அவர்களை நோக்கி நகர, அவர்கள் பின் நோக்கி நகர்ந்தபடி சென்றனர்.

நான்கு பேர் இருந்தமையால், மிருகங்களும் கொஞ்சம் குழம்பிப் போயிருந்தன.

"டிஸ்கவரி ச்சனலில் வார மாதிரி கடிச்சுக் குதறிடுமோ...!??!"

"வாயை மூடு!"

மிருகங்கள் அவற்றின் வேகத்தைக் கூட்டின. வினித் மிருகங்களைப் பார்த்த படியே பின்னால் வேகமாக நகர முயன்று தோற்றுப்போனான். ஒரு கல்லில் கால் தடுக்கி கீழே விழுந்தான். இதுதான் சரியான தருணம் என்று எண்ணிய மிருகம், ஒரே பாய்ச்சலாக அவன் மேல் பாய்ந்தது !!!

வினித் கண்களை மூடிக்கொண்டான். மிருகத்தின் கூரிய நகமோ, பற்களோ அவன் மீது படும் என்று எண்ணினான். ஆனால், அது நடக்கவே இல்லை.

"வினித்..!! எழும்பு..!! எல்லாம் முடிஞ்சுது..."

வினித் தயங்கியபடி கண்களைத் திறந்தான்... அவன் முன்னால் எந்த மிருகமும் இல்லை. அவனது நண்பரின் முகங்களும், தங்கையின் முகமும்தான் அருகாக தெரிந்தது.

"என்ன நடந்தது...!?"

"எதுவும் நடக்கலை... இதோ... இந்த ஆதிவாசி வந்து அம்பு எய்து அந்த மிருகத்தைக் கொன்னுட்டான் !"

வினித் எழுந்து பார்த்தான். அங்கே ஒரு பழங்காலத்து ஆடை அணிந்த இளைஞன், அவர்களை விநோதமாகப் பார்த்தபடி நின்றுகொண்டிருந்தான். அவன் கைகளில் ஒரு வளைந்த வில்லும் சில கூர்மையான அம்புகளும் இருந்தன.

"நான் ஆதிவாசி அல்ல, என் பேர் 'விராயுகம்'. நீங்கள் எந்த தேசம்??"

"தேசமா...!?!? ... இதே தேசம்தான். ஆனால் ஒரு ஆயிரம் வருஷம்..."

லியோ கூறி முடிப்பதற்குள், வினோத் அவனை இடை மறித்தான்.

"நாங்கள் வேறொரு தேசத்திலிருந்து வருகிறோம்... சும்மா சுற்றிப்பார்க்க வந்தோம்..."

"அப்படியா..!? விழாக் காலத்தில் அங்ஙனம் பலர் இங்கு வருவார்கள். உங்கள் தேசத்தின் பெயர் என்ன?"

"அங்கும் தமிழ் தானா..??"

"நாங்க...வந்து.... 'ப்ளூட்டோ' என்கிற நாட்டிலிருந்து வருகிறோம். அங்கேயும் தமிழ் தான், ஆனால் உங்களை மாதிரி செந்தமிழ் எல்லாம் இல்ல. கொஞ்சம் இங்க்லிஷ் கலந்து பேசுவோம்"

தொடர்கதை...

(தொடரும்)

---

ஒரு காட்டில் ஆடு ஒன்று அமைதியாக புற்களை மேய்ந்துகொண்டிருந்தது. அப்போது நரி ஒன்று அந்தப் பக்கமாக வந்தது. ஆட்டைப் பார்த்ததும் அதனை உணவாக்கிக்கொள்ள நரி எண்ணியது. அதனால், மெதுவாக ஆட்டிடம் பேச்சுக் கொடுத்தது.

"ஆடே... உன்னைப் பார்த்தால் எனக்குப் பாவமாக உள்ளது" என்றது. ஆடும் நரியை நிமிர்ந்து பார்த்தது. 'எனக்கென்ன? நான் நன்றாகத்தானே இருக்கிறேன்!' என்றது.

"ஆடே! பச்சைப் பசும் புற்கள் உள்ள பகுதியை நான் அறிவேன். அவற்றையெல்லாம் விட்டு விட்டு இந்தக் காய்ந்த புற்களைப் புசிக்கின்றாயே!" என்றது நரி.

"நீ என்ன சொல்கிறாய்!" என்று ஆடு நரியைப் பார்த்துக் கேட்டது.

# தீயோர் நட்பு



"உண்மையைத்தான் சொல்கிறேன். நீ என்னுடன் வந்தால் அந்தப் புல் வெளியை நான் காட்டுகிறேன்" என்றது நரி. ஆடும் "சரி வா போகலாம்" என்றது.

நரி ஆட்டை அழைத்துக்கொண்டு காட்டிற்குள் சென்றது. நடுக் காட்டிற்கும் சென்றுவிட்டது. ஆனால், நரி சொன்னதுபோல புல்வெளி எதையும் காணவில்லை. ஆடு மனதிற்குள் பயந்தது. 'அடக் கடவுளே! இந்த நரியின் பேச்சை நம்பி மோசம் போனேனே! நிச்சயம் இந்த நரி என்னைக் கொன்று தின்னப் போகிறது" என நினைத்தது.

அப்போது அருகில் சிங்கத்தின் கர்ஜனை ஒன்று கேட்டது. "ஐயோ" என்று அலறியபடி நரி தலைதெறிக்க அங்கிருந்து ஓடத் தொடங்கியது. செய்வதறியாது நின்ற ஆட்டின் முன்னால் சிங்கம் வந்துவிட்டது. 'இதுதான் என் இறுதி நொடி!' என்று ஆடு நினைத்தது. அப்போது அந்தப் பக்கமாக புலி ஒன்று எதிர்பாராத விதமாக வந்தது. ஆட்டைப் பார்த்த புலி அதனை நோக்கிப் பாய்ந்து சென்றது. இதைப் பார்த்துக் கோபம் கொண்ட சிங்கம் புலியை இடைமறித்தது.

"இந்த ஆடு என் இரை... இங்கிருந்து நீ போய் விடு" என்று புலியைப் பார்த்து கர்ஜித்தது சிங்கம். புலியும் பதிலுக்கு உறுமியது. ஆட்டை யார் உணவாக்கிக்கொள்வது என்று புலியும் சிங்கமும் கடுமையாக சண்டையிட்டுக்கொண்டன. இச்சந்தர்ப்பத்தை பயன்படுத்திய ஆடு "கடவுளே! நீ இருக்கிறாய்! நயவஞ்சக வார்த்தையால் பேராபத் தில் சிக்கியிருப்பேன் நல்லவேளை என்னை காப்பாற்றிவிட்டாய்" எனக் கூறியபடியே, ஆடு தன் இருப்பிடத்தை நோக்கி ஓடித் தப்பியது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பூந்தல் தேசிய சரணாலயம்







**இலங்கையின் தென் கரையோரத்தில் அம்பாந்தோட்டைக்கும் கிரிந்தி ஓயாவிற்கும் இடையில் 6216 ஹெக்டயர் பரப்பளவில் பூந்தல தேசிய சரணாலயம் அமைந்துள்ளது. இச்சரணாலயத்தின் மேற்கே அம்பாந்தோட்டை பூந்தல பிரதான வீதியும் கிழக்கே கிரிந்தி ஓய நதியும் எல்லைகளாகக் கொண்டுள்ளன.**

## காலநிலை

இச்சரணாலயத்தில் புவியியல் ரீதியாக முக்கியமாக மூன்று வலயங்களை இனங்காணலாம்.

- ★ கரையோரப் பிரதேசம் மற்றும் மணல் மலையுடன் பிரதேசம்.
- ★ களப்பு மற்றும் வெளிப்புற கரையோரச் சமவெளி வலயம்.
- ★ உள்ளக கரையோரச் சமவெளிப் பிரதேசம் (கரையோர மற்றும் மணற்பாங்கான வலயம்)

பூந்தல பிரதேசத்தின் காலநிலையானது வெப்பமான உலர் தன்மை கொண்டது. இச் சரணாலயம் தாழ்நில உலர் வலயத்திற்குரியது. வருடாந்த மழைவீழ்ச்சி 107.4 மில்லி மீற்றராகும். வடகீழ் பருவப்பெயர்ச்சிக் காற்று காலத்தில் தொடர்ச்சியாக மழைபொழியும். அதனைத் தவிர ஏனைய காலங்களில் மழைவீழ்ச்சி நிச்சயமற்ற நிலையே காணப்படுகிறது. வருடாந்த வெப்பநிலை 28 பாகை செல்ஷியஸ் ஆகும். இவ்வெப்ப நிலை அதிகரிக்கும் சந்தர்ப்பங்களும் உண்டு.

## பறவைகளின் சொர்க்கபுரி

இச் சரணாலயம் பறவைகளின் சொர்க்கபுரி ஆகும். வெண் தொடை மீன்கொத்தி (Halcyon Smyrnensis) என அழைக்கப்படும் பறவையும் மஞ்சள் மூக்கு நாரை Mycteria Leucocephala, சிறுத்த பெருநாரை (Lepfoptilos Javanicus), மலபார் வெள்ளை கறுப்பு இருவாச்சி (Anthracoceros Coronatus), அமெரிக்க பூநாரை (Phoenicopterus Rubber) ஆகிய பறவைகள் இச்சரணாலயத்திலும் அதனை அண்டிய பகுதிகளிலும் பரவலாக வாழ்கின்றன. பறவைகள் மட்டுமல்லாது நன்னீர், உவர்நீர் மீன்கள், இறால் வகைகள், நண்டுகள், கணவாய் வகைகள் என பலவகை உயிரினங்கள் இங்கு காணப்படுகின்றன.

## வேடந்தாங்கல் பறவைகள்

இலங்கையில் வாழும் நீர்வாழ் பறவைகளில் ஏறக்குறைய அனைத்து வகை பறவைகளையும் இத்தேசிய பூங்காவில் காணலாம். இப்பொழுது 151 வகையான பறவைகள் வாழ்வதாக அறிக்கைகள் தெரிவிக்கின்றன. இவற்றில் 50 பறவை இனங்கள் வேடந்தாங்கல் பறவைகளாகும். இத் தேசிய பூங்காவில் காணக்கூடிய இலங்கைக்கே உரித்தான ஒரே ஒரு பறவை காட்டுக்கோழி ஆகும். ஓகஸ்ட் மாதம் முதல் ஏப்ரல் மாதம் வரை இங்கு பெருந்தொகையான வேடந்தாங்கல் பறவைகளைக் காணலாம். இத்தேசிய பூங்காவில் 56 வகையான முலையூட்டிகள் வாழ்வதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. இவற்றில் இலங்கைக்கே உரித்தான முலையூட்டி வகைகள் நான்காகும்.

## சரணாலயம்

இத் தேசிய பூங்கா 1969 ஆம் ஆண்டில் சரணாலயமாக பிரகடனப் படுத்தப்பட்டது. 1993 ஜனவரி மாதம் வெளியிடப்பட்ட அதி விசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் தேசிய பூங்காவாக இது அறிவிக்கப்பட்டது.





noolaham.org | aavanaham.org

கூட்டுறவுச் சங்கத்தினை ஆங்கிலத்தில் Cooperative என்று அழைப்பர். உலகின் முதலாவது கூட்டுறவுச் சங்கமாக 1844 இல் இங்கிலாந்தின் மன்ச்செஸ்டர் ரொச்டெல் கிராமத்தில் ஆரம்பிக்கப்பட்ட 'ரொச்டெல் நீதியான முன்னோடிகள் சங்கத்தினைக் (The Rochdale Society of Eauitable Pioneers) குறிப்பிட முடியும்.

இலங்கையில் முதலாவது கூட்டுறவுச் சங்கமாக 1906 இல் தெல்தெனிய கிராமத்தில் ஆரம்பிக்கப்பட்ட தும்பறை கூட்டுறவு கடன் சங்கத்தினைக் குறிப்பிட முடியும். இலங்கையில் கூட்டுறவு இயக்கம் 1911 இல 7 என்ற கூட்டுறவுச் சட்டத்தின் மூலம் ஒழுங்குபடுத்தப்பட்டது. 1972 இல 5 கூட்டுறவுச் சங்க சட்டமே தற்போது அமுலில் உள்ளது.

இன்று இலங்கையில் கூட்டுறவுச் சங்கம் சில்லறை மற்றும் மொத்த விற்பனை, பலதரப்பட்ட உற்பத்திகள், பலவித சேவைகள், இறக்குமதி ஏற்றுமதி, எரிபொருள் விநியோகம், அச்சு, வைத்தியசாலை, காப்புறுதி, வங்கி ஆகிய துறைகள் பலவற்றிலும் பரவியுள்ளது.

## கூட்டுறவுச் சங்கத் தோற்றப் பின்னணி

19 ஆம் நூற்றாண்டு தொழில் புரட்சியின் பின்னர் தொழிலாளர் பிரிவு ஒன்று உருவானது. தொழிற்சாலை உரிமையாளர்கள் வரையறையின்றி தொழிலாளர்களிடம் வேலை வாங்கினர். தினமும் 10 முதல் 12 மணித்தியாலங்களுக்கு அதிகமாக தொழிலாளர்கள் பணியாற்ற நிர்ப்பந்திக்கப்பட்டனர். எனினும் உரிய ஊதியம் அவர்களுக்கு வழங்கப்படவில்லை. இதற்குப் பதிலாக தொழிலாளர்களுக்கு கூப்பன் வழங்கப்பட்டு தொழிற்சாலை உரிமையாளர்களின் விற்பனை நிலையங்களில் தமக்கு வேண்டிய பொருட்களை கொள்வனவு செய்யக் கூடியதாக ஒரு முறைமை இருந்தது. எனினும் அவற்றில் விலை அதிகமாகவே இருந்தது.

இந்த அவலமான நிலையினை எதிர்கொள்வதற்கு ரொச்டெலை சேர்ந்த தொழிலாளர்கள் 1844இல் தலா ஒரு பவுண் வீதம் 28 பவுண் நிதி சேகரிப்பில் ஈடுபட்டனர். இந்நிதியில் பொருட்களை கொள்வனவு செய்த அவர்கள் மிகவும் குறைந்த விலைக்கு அவற்றை விநியோகம் செய்தனர். ரொச்டெலின் நீதியான முன்னோடிகள் சங்கமானது, கூட்டுறவுச் சங்கமாக மாறியது இதன் பின்னரே யாகும்.









### ரொபட் ஓவன் (1771-1858)

சர்வதேச கூட்டுறவுச் சங்கத்தின் தந்தையாக ரொபட் ஓவன் என்பவர் கருதப்படுகின்றார். வெற்றிகரமான வர்த்தகரான இவர் தொழிலாளர்கள் மீது பரிவு கொண்டவர். இவர் சமூக மறுசீரமைப்பு இயக்கத்தின் முன்னோடியாவார். இதனால் இவரின் கொள்கைகளைப் பின்பற்றியோர் 'ஓவன்வாதிகள்' என்று அழைக்கப்பட்டனர். முதலாவது ஆங்கில சமூகவாதியாகவும் அவர் கருதப்படுகின்றார். ஒத்துழைப்பு என்ற சொல்லில்இருந்து கூட்டுறவினை பிரித்தறிந்த முதலாவது அறிஞரும் இவராவர். ஓவன் கூட்டுறவினை உருவாக்கியவர் அல்லர். எனினும் கூட்டுறவுச் சங்கத்தினை ஓர் இயக்கமாகக் கட்டியெழுப்பியவர் ஓவன் என்பது குறிப்பிடத்தக்கது.

## இலங்கையின் கூட்டுறவு இயக்கத்தின் முக்கியமான காலப்பகுதிகள்

### முதலாவது காலப்பகுதி:
1911 முதல் 1941 வரை கடன் வழங்கும் கூட்டுறவுச் சங்க காலப்பகுதி

### இரண்டாவது காலப்பகுதி:
1942 முதல் 1946 வரை நுகர்வோர் கூட்டுறவுச் சங்கத்தின் வளர்ச்சிக் காலப்பகுதி

### மூன்றாவது காலப்பகுதி:
1947 முதல் 1956 வரை விவசாய கூட்டுறவு சங்கத்தின் வளர்ச்சிக் காலப்பகுதி

### நான்காவது காலப்பகுதி:
1957 முதல் 1970 வரை பல்நோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் காலப்பகுதி

### ஐந்தாவது காலப்பகுதி:
1977 இன் பின்னர் கூட்டுறவுச் சங்க காலப்பகுதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரொச்டெல் நீதியான முன்னோடிகள் சங்கத்தின் பன்னிரண்டு உறுப்பினர்கள்



ரொச்டெல் நீதியான முன்னோடிகள் சங்கத்தின் முதலாவது விற்பனைநிலையம்





### கூட்டுறவுச் சங்கக் கொடி

எக்காலப்பகுதிக்கும் பொருந்தும், அனைத்து இனங்களையும் பிரதி நிதித்துவம் செய்யும் விதமாகவே, வானவில் நிறம் சர்வதேச கூட்டுறவுச் சங்கத்தின் கொடியில் அமைந்துள்ளது. பிரான்ஸ் நாட்டினைச் சேர்ந்த சார்ள்ஸ் கைட் என்பவரால் இக்கொடி வடிவமைக்கப்பட்டது. 1923 இல் முதலாவது சர்வதேச கூட்டுறவுச் தினத்தில் இது அறிமாகியது.

### கூட்டுறவுச் சங்கம் என்பதன் அர்த்தம்

கூட்டு உரிமையுடன் ஜனநாயக கட்டமைப்பு கொண்ட தொழில் முனைவோரினால் தமது பொது பொருளாதாரம், சமூக மற்றும் கலாசார தேவைகள், எதிர்பார்ப்பு மற்றும் அபிலாஷைகள் என்பனவற்றை நிறைவேற்றிக் கொள்வதற்காக, சுயதேவையின் அடிப்படையில் ஒன்றுசேர்ந்த சுயாதீனமான தனிநபர்களைக் கொண்ட நிறுவனமாகும்.

### கூட்டுறவுக் கொள்கைகள்

1. சுயேச்சை மற்றும் வெளிப்படை உறுப்புரிமை
2. ஜனநாயக சமூக நிர்வாகம்
3. சமூக பொருளாதார பங்களிப்பு
4. சுய நிர்வாகம் மற்றும் இறைமை
5. கல்விப் பயிற்சி மற்றும் தகவல்
6. கூட்டுறவுச் சங்கங் களுக்கு இடையில் ஒத்துழைப்பு
7. பிரஜைகள் பற்றிய அக்கறை

### கூட்டுறவு ஒழுக்கநெறி

1. ஆத்ம உதவி
2. சுய பொறுப்பு
3. சமத்துவம்
4. நீதி
5. ஒத்துழைப்பு
6. ஜனநாயகத் தன்மை

### கூட்டுறவு ஒழுக்கநெறிக் கோவை

1. நேர்மை
2. வெளிப்படை
3. சமூகப் பொறுப்பு
4. பிறரைப் பாதுகாத்தல்

# அனைவருக்கும் சரிசமமாய் உதவிடும் கூட்டுறவுச் சங்கம்

CRB
Co-opretive Rural Bank
COLOMBO SOUTH CORPARATIVE SOCIETY
(POLWATTA BRANCH)
CO-OPERATIVE INSURANCE COMPANY
For the People by the People...
FARMERS
COOPERATIVE
International day 2017 of co-operatives
coop
The Schools Co-operative Society
VACANCY
nicd SRI LANKA
National Institute Cooperative Development

### கூட்டுறவுச் சங்க பதிவாளர்

இலங்கையில் கூட்டுறவுச் சங்கங்களை பதிவு செய்தல் மற்றும் முடித்து வைத்தல் ஆகிய அதிகாரங்கள் பதிவாளருக்கு உண்டு. தற்போது மாகாண பதிவாளர்கள் ஒன்பது பேர் பணியாற்றி வருகின்றனர்.

### தேசியமட்ட கூட்டுறவுச் சங்கம்

இலங்கை தேசிய கூட்டுறவுச் சபை, இலங்கை கூட்டுறவு விற்பனைச் சங்கம், இலங்கை நுகர்வோர் கூட்டுறவுச் சங்கம் ஆகிய தேசிய மட்ட கூட்டுறவுச் சங்கங்கள் பத்தும் நாடளாவிய ரீதியில் 33 நிறுவனமட்ட கூட்டுறவுச் சங்கங்களும் பல்வேறு துறைகளில் இயங்குகின்றன.

### ஆரம்பநிலை கூட்டுறவுச் சங்கங்கள்

பாடசாலை கூட்டுறவுச் சங்கங்கள், கூட்டுறவு மற்றும் கடன் கொடுக்கல் வாங்கல் பற்றிய கூட்டுறவுச் சங்கம், மீன்பிடி தொழிட்துறை கூட்டுறவுச் சங்கம், புடவைக் கைத்தொழில் கூட்டுறவுச் சங்கம் மற்றும் பல்நோக்கு கூட்டுறவுச் சங்கங்கள் என்பன ஆரம்ப நிலை கூட்டுறவுச் சங்கங்களாகக் கருதப்படுகின்றன.

### தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவனம், பொல்கொல்ல

கூட்டுறவு கல்வி இதன் பணியாகும். நிரந்தரப் பயிற்சி நெறிகளுடன் தேவைக்கு ஏற்ற அடிப்படையிலான வேறு பலதரப்பட்ட பாடநெறிகள் இங்கு நடத்தப்படுகின்றன. கூட்டுறவு அபிவிருத்தி அதிகாரிகளின் தொழில் முன்னேற்றத்திற்கான கூட்டுறவு அபிவிருத்தி தொடர்பிலான சான்றிதழ் பாடநெறியும், டிப்ளோமா பாடநெறியும் நிரந்தர பாடநெறிகளாகும்.

### இலங்கை தேசிய கூட்டுறவு சபை

இலங்கையின் அனைத்து கூட்டுறவுச் சங்கங்களின் தேசிய மற்றும் சர்வதேச பிரதிநிதியாக செயற்படும் உயர் மட்ட அமைப்பாகும். இது 1955 இல் ஆரம்பிக் கப்பட்டது. இதன் அங்கத்துவத்தினை பதிவு செய்யப்பட்ட கூட்டுறவுச் சங்கங் களினாலேயே பெற முடியும். பிரதான சபையின் வாக்குகளினால் தலைவர் தெரிவு செய்யப்படுவார்.

### பாடசாலை கூட்டுறவுச் சங்கம்

பொதுவாக 6 ஆம் ஆண்டுக்கு மேற்பட்ட மாணவர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் பாடசாலை கூட்டுறவுச் சங்கத்தின் அங்கத்துவத்தினைப் பெற முடியும். பாடசாலை கூட்டுறவுச் சங்கத்தினை அமைப்பதற்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரின் ஒத்துழைப்பினைப் பெற்றுக் கொள்ள முடியும்.

### கூட்டுறவுச் சங்கத்தினைப் பதிவு செய்தல்

சங்கம் அமைக்கப்பட்டு ஆறு மாதங்களின் பின்னர் கோரிக்கை விடுப்பதன் மூலம் பதிவைப் பெற முடியும். ஆகக் குறைந்த எண்ணிக்கை 10 ஆகும். அதிக பட்ச எண்ணிக்கைக்கு வரையறை இல்லை. ஒரு பாடசாலையினுள் அல்லது ஒரு அதிகாரப் பகுதிக்குள் ஒரே விதமான சங்கங்கள் இரண்டினை பதிவு செய்து கொள்ள முடியும். பதிவு செய்யப்படும் போது, கருத்திற்கொள்ளப்படும் விடயம் யாதெனில், அது சரியான முறையில் நடத்தப்படுகின்றதா? என்பதாகும். பதிவு காரணமாக, சங்கத்திற்கு சட்ட அங்கீகாரம் கிடைக்கும்.

### கூட்டுறவுச் சங்க கணக்காய்வு

கூட்டுறவு சங்கத்தின் கணக்கு களை கூட்டுறவு கண்காணிப் பாளர் ஆய்வுசெய்வார். இது கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களத்தினால் வழங்கப் படும் இலவச சேவையாகும்.

### கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களத்தின் முகவரி:

கூட்டுறவு அபிவிருத்தி
ஆணையாளர் மற்றும்
கூட்டுறவுச் சங்கப் பதிவாளர்,
கூட்டுறவு அபிவிருத்தி
திணைக்களம்,
இல 300, யூனியன் பிளேஸ்,
கொழும்பு- 02

(-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுற்றாடல்

பெயர்: ...............................................




**01) சரியான விடையைத் தெரிந்து அதன்கீழ் கீறிடுக.**

01. காடுகளை பெருமளவில் அழிப்பதால் ஏற்படுவது யாது?
1. மழை 2. சுற்றாடல்
3. காலநிலை மாற்றம் 4. வெப்பம்

02. கத்தரிக்கோல் ஒரு;
1. சாய்தளம் 2. ஆப்பு
3. நெம்புகோல் 4. கப்பி

03. நூலில் கட்டித் தொங்கவிடப்பட்ட காந்தம் காட்டும் திசை;
1. வடக்கு, கிழக்கு 2. வடக்கு, தெற்கு
3. கிழக்கு, மேற்கு 4. மேற்கு, தெற்கு

04. நடு இரவில் பூக்கும் பூ எது?
1. அரலி 2. மல்லிகை
3. சூரியகாந்தி 4. கடுபுல்

05. பின்வருவனவற்றுள் அனைத்தும் உண்ணி யாது?
1. புறா 2. காகம்
3. சிங்கம் 4. யானை

06. பின்வருவனவற்றுள் கறிகளுக்குப் பயன்படுத்தும் சுவையூட்டி அல்லாதது எது?
1. உப்பு 2. கறிவேப்பிலை
3. மாசி 4. மஞ்சள்

07. எமது நாட்டிற்குரிய தேசிய மலர் எது?
1. அல்லி 2. தாமரை
3. நீலோற்பலம் 4. செவ்வந்தி

08. தூக்குக்குண்டை தமது தொழிலில் உபயோகப்படுத்துபவர் யார்?
1. விவசாயி 2. மேசன்
3. தச்சன் 4. பொற்கொல்லன்

09. புரதம் குறைவான உணவுப் பதார்த்தம் எது?
1. உருளைக்கிழங்கு 2. முட்டை
3. பருப்பு 4. சிறகவரை

10. தீபாவளி கொண்டாடப்படும் மாதம் எது?
1. புரட்டாசி 2. தை
3. ஐப்பசி 4. கார்த்திகை

11. அதிகளவில் சீனியை உபயோகிப்பதால் ஏற்படக்கூடிய நோய் யாது?
1. நீரிழிவு 2. கண்டமாலை
3. மாலைக்கண் 4. தொண்டைக் கழலை

12. விசர் நாயினால் கடியுண்ட ஒருவர் செய்ய வேண்டியது யாது?
1. மாந்திரிகத்தினால் மந்திரித்தல்
2. வைத்தியசாலைக்குச் சென்று ஊசி மருந்து ஏற்றுதல்
3. தைலம் பூசுதல்
4. நாய்க்கு விசரா என்று தேடிப் பார்த்தல்

13. வித்து முளைப்பதற்கு அவசியமற்ற காரணி யாது?
1. ஒளி 2. வளி
3. வெப்பம் 4. நீர்

14. பத்துக் கால்களை கொண்ட பிராணி எது?
1. எறும்பு 2. இறால்
3. வண்ணத்துப்பூச்சி 4. பூரான்

15. பழுதடைந்தவற்றை இனம்காணக்கூடிய வழிகள் பின்வருவனவற்றுள் எது?
1. மணம் வீசும்
2. நிறம் மாறியிருக்கும்
3. பூஞ்சணம் பிடித்திருக்கும்
4. மேற்கூறிய யாவும்

**02) சரியான விடையைத் தெரிந்து இடைவெளிகளை நிரப்புக.**

**வல்லாரை, பொன்னாங்கண்ணி, அகத்தி, தூதுவளை, குப்பைமேனி**

01. அதிகளவில் இரும்புச் சத்தைக் கொண்ட கீரை வகை ........................................
02. .................................. எண்ணெய் தயாரிக்கப் பயன்படும்.
03. பச்சையாக உண்ணக்கூடிய கீரை............................ ஆகும்.
04. பூனைக்கு மருந்தாகப் பயன்படுவது................................ ஆகும்.
05. தடிமனுக்கு ....................................... சிறந்த மருந்தாகும்.

**(விடைகள் அடுத்த இதழில் வெளிவரும்)**

### விடைகள் - கணிதம்


| | | | | | |
|---|---|---|---|---|---|
| 01) | 1. 1 | 4. 2 | 7. 3 | 10. 1 | 13. 2 |
| | 2. 2 | 5. 1 | 8. 2 | 11. 2 | 14. 1 |
| | 3. 3 | 6. 2 | 9. 2 | 12. 2 | 15. 3 |
| 02) | 1. 20001 | | | | |
| | 2. 200÷8 | 36+5 | 89x0 | 200-16 | |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 99 ஆண்டுகளுக்குப் பின்னர் அமெரிக்க பெருங்கண்டத்தில் பூரண சூரிய கிரகணம்








99 ஆண்டுகளுக்குப் பின்னர் அமெரிக்கா உட்பட, வட அமெரிக்க பெருங்கண்ட நாடுகளைச் சேர்ந்த மக்கள் கடந்த 21ஆம் திகதி பரிபூரண சூரிய கிரகணத்தினைக் கண்டுகளித்தனர். இதற்கு முன்னர் வட அமெரிக்க பெருங்கண்டத்தினைச் சேர்ந்த நாட்டு மக்கள் இவ்வாறான பூரணமான சூரிய கிரகணத்தினை 1918ஆம் ஆண்டு ஜுன் 8ஆம் திகதியே பார்த்திருந்தனர். அமெரிக்கர்கள் இந்த சூரிய கிரகணத்திற்கு 'பெரும் அமெரிக்க சூரிய கிரகணம்' என்று பெயர் சூட்டியிருந்தனர். சுமார் 100 ஆண்டுகளின் பின்னர் காணக் கிட்டிய இந்த சூரிய கிரகணத்தினைக் கண்டுகளிப்பதற்கு பெருமளவான வெளிநாட்டவர்கள் அமெரிக்கவுக்கு விஜயம் செய்திருந்தனர்.

## சூரிய கிரகணம்




5 பில்லியன் ஆண்டுகள் வயதான சூரியன் வாயுக்களினால் உருவான நட்சத்திரமாகும்.



1 மையப் பகுதியில் ஹைட்ரஜன் வாயு நிரம்பியுள்ளது.
2 காற்று வெளி நோக்கி தள்ளப்படுகின்றது.
3 சூரியனின் வெடிப்பு
4 பூமியில் தென்படும் சூரியனின் மேற்பரப்பு
5 காற்று சலனம் உள்ள பகுதி
6 மைய வெப்பநிலை 15 மில்லியன் செல்சியஸ்
7 மேற்பரப்பு வெப்பநிலை 5,800 பாகை செல்சியஸ்

© AFP

## கிரகணம் பார்த்த டிரம்ப்

சூரிய கிரகணம் அமெரிக்காவின் ஒரேகானிலிருந்து தென் கரோலைன் வரை சுமார் 14 மாகாணங்களில் தெளிவாக தென்பட்டது. அமெரிக்க வெள்ளை மாளிகை அமைந்துள்ள வொஷிங்டன் நகரும் இதற்குள் அடங்கும். அமெரிக்க ஜனாதிபதி டிரம்ப், அவரது துணைவியார் மெலனியா, புதல்வர் பெரன், புதல்வியாரும் ஆலோசகருமான இவன்க்கா ஆகியோரும் அமெரிக்க வெள்ளை மாளிகையிலிருந்து பரிபூரணமான சூரிய கிரகணத்தினை கண்டு மகிழ்ந்தனர்.

## 90 நிமிடங்கள்

ஜனாதிபதி டிரம்ப் மட்டுமன்றி அமெரிக்க வெள்ளை மாளிகை ஊழியர் குழாமும் 99 ஆண்டுகளின் பின்னர் காணக் கிடைக்கும் இந்த சூரிய கிரகணத்தினைக் கண்டுகளிப்பதற்கு பெரும் ஆர்வம் காட்டினர். அமெரிக்காவுக்கு காலை 9 மணிக்கு சூரிய கிரகணம் தென்பட ஆரம்பித்தது. காலை 10.20 அளவில் சூரியன் முற்றாக மறைந்து விட்டது. இதனால், சுமார் 90 நிமிடங்கள் வரை இருள் பரவியிருந்தது. அமெரிக்காவின் 14 மாகாணங்களில் சூரிய கிரகணம் முழுமையாக தென்பட்ட போதிலும் இதர மாகாணங்களில் அரை சூரிய கிரகணமாகவே தென்பட்டது. 99 ஆண்டுகளுக்கு பின்னர் வட அமெரிக்கர்களுக்கு காணக் கிடைத்த இந்த சூரிய கிரகணத்தினை நாசாவும் உறுதிப்படுத்தியிருந்தது. 21ஆம் திகதி மாலைப் பொழுதில் ஐரோப்பிய நாடுகள் சிலவற்றுக்கு அரை சூரிய கிரகணம் தென்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

## மீண்டும் 2019ஆம் ஆண்டில்

மேலும் இவ்வாறான ஒரு





சூரிய கிரகணம் மீண்டும் 2019ஆம் ஆண்டு ஜுலை 2ஆம் திகதி தென்படும் என்று நாசா அறிவித்துள்ளது. தென் பசுபிக் நாடுகளுக்கு இந்த சூரிய கிரகணம் தென்படவுள்ளது. அதன்படி, சிலி மற்றும் ஆஜன்ரீனா நாடுகளுக்கு இந்த சூரிய கிரகணம் முழுமையாக தென்படவுள்ளது. அத்துடன், அமெரிக்காவை இருளில் தள்ளும் சூரிய கிரகணம் மீண்டும் 2024ஆம் ஆண்டு ஏப்ரல் 8ஆம் திகதி தென்படவுள்ளதாகவும் நாசா நிறுவனம் மேலும் எதிர்வுகூறியுள்ளது.

---

**விஜய் + தூவானம் இணைந்து வழங்கும் பரிசுப் போட்டி**

பிரதி புதன்தோறும் Thoovaanam SMS ஊடாக கேட்கப்படும் பொது அறிவுக் கேள்விக்கான சரியான விடையினை 'விஜய்' கூப்பனில் நிரப்பி தபாலிட்டு ரூபா. 8,000 பெறுமதியான 3 பரிசில்களையும் பெற்றிடுங்கள்.

வாராந்தம் இவ் 3 பரிசில்களையும் வெல்வதற்கான கேள்வியினை அறிந்து கொள்ள → அருகில் காட்டப்பட்டவாறு உங்கள் கையடக்க தொலைபேசியில் Thoovaanam SMS இனை செயற்படுத்திக்கொள்ளுங்கள்

**Thoovaanam SMS செயற்படுத்தும் முறை**

F Thoovaanam

என Type செய்து 40404 எனும் இலக்கத்திற்கு SMS செய்யவும்

(இச்சேவை முற்றிலும் இலவசம்)

**அனுப்ப வேண்டிய முகவரி :**

3 பரிசில்கள்
06.09.2017
விஜய்
த.பெ.இல: 2037
கொழும்பு

இவ்வார கூப்பன் - 06.09.2017
விடை : ..............................
பெயர் : ..............................
முகவரி : ......................
தொ.பே.இல: ..........................
பாடசாலை : ..........................
..............................
கையொப்பம்

3 பரிசில்கள் போட்டி - 23.08.2017
விடை: 200,000
வெற்றியாளர்:
ஏ.ஆர்.அஹ்மத்,
இறக்கக்கண்டி,
நிலாவெளி.

Gift sponsored by:
www.srijob.com







How to ask Questions + Answers in English





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இருமலை தடுப்போம்!



தற்போது நாடெங்கிலும் ஒரு வகையான இருமல் பரவி வருகின்றது. மழையும் வெயிலும் கொண்ட காலநிலையும் இதற்குக் காரணம் எனலாம். எனினும் இருமலுக்கான சரியான காரணத்தினைக் குறிப்பிடுவது கடினமாகும். அந்தவகையில், பல உடற் காரணங்களினாலும் இருமல் ஏற்படக் கூடும். இதற்கு காலநிலை மாற்றம் மட்டும் காரணமாக இருக்க முடியாது. எனவே, இருமலுக்கான காரணங்கள் சில இங்கு தரப்படுகின்றன.



## நீண்ட காலம் நிலவும் உடல் நோய்கள்

நீண்ட காலம் ஆஸ்துமா, மூச்சு அலர்ச்சி நோய்களினால் பாதிக்கப்பட்டுள்ளவர்களுக்கும் இருமல் இருக்கும். மேற்கூறப்பட்ட நோய்கள் தீவிரமடையும் போது இருமலும் தீவிர மடையும். மேலும், குடலில் அமிலச் சுரப்பு அதிகமாக உள்ளவர்களுக்கும், கெஸ்ட்ரைட்டிஸ் உள்ளவர்களுக்கும் இருமல் ஏற்படக் கூடும். அத்துடன், அடிக்கடி உறக்கம் ஏற்படும் நோய் உள்ளவர்களுக்கும் இருமல் இருக்கும். இவ்வாறான நிலைமையில் மருத்துவரின் அனுமதியின்றி மருந்துகளை உட்கொள்ளக் கூடாது.

## தடிமன் மற்றும் காய்ச்சல்

தடிமன் மற்றும் காய்ச்சல் என்பன இருமலுக்குப் பொதுவான காரணமாகக் கருதப்படுகின்றது. இதனால் சுவாசப்பாதை தடைப்படுகின்றது. சுவாசக் குழாய் நோய்க்கிருமிகளின் தாக்கத்தினால் வீக்கமடைவதே, இதற்கு காரணமாகும். நுரையீரல் செயற்பாட்டிற்குப் போதுமான காற்று கிடைக்காதிருப்பதனை தவிர்ப்பதற்காக, இருமல் ஏற்படுகின்றது. தடிமன் காய்ச்சல் குணமடைந்தவுடன், இருமலும் குணமடைந்து விடுகின்றது.

## மன அழுத்தம்

நீண்ட கால மன அழுத்த நிலை உள்ளவர்களுக்கு இருமல் ஏற்படும் என்பது உங்களுக்கு தெரியுமா? இவ்வாறான நிலையில் உலர்ந்த இருமலே ஏற்படக் கூடும். இவ்வாறான இருமலை மருந்துகளினால் ஒருபோதும் குணப்படுத்த முடியாது. நீங்கள் இடைவிடாமல் கடுமையாக உழைத்து களைப்படைந்திருந்தால் 78 மணித்தியால உறக்கத்தினைப் பெறுங்கள். அல்லது மன அழுத்தத்தினைக் குறைக்கும் செயற்பாடுகளில் ஈடுபடுங்கள். இருமலும் தானாகவே நின்று விடும்.

## நீர் அருந்துவது குறைதல்

உங்கள் உடலில் வரட்சித் தன்மை ஏற்பட்டாலும் இருமல் ஏற்படும். இதனால் போதுமானளவு நீர் அருந்த வேண்டியது அவசியம். இதன்மூலம் உடல் வரட்சியைக் கட்டுப்படுத்திக் கொள்ளுங்கள். உடலின் வெளிப்பகுதிக்கு அன்றி உள்ளுறுப்புகளுக்கு நீர் வழங்கப்படுதலே அவசியமாகும்.




## பெக்டீரியாவின் செயற்பாடுகள்

இருமலுக்கு முழுக் காரணம் நோய் அல்ல. அது மட்டுமன்றி இருமல் சாதாரண காரணத்திற்காகவும் ஏற்படுவதில்லை. பெக்றீரியா செயற்பாடுகள் காரணமாகவும் இருமல் ஏற்படலாம். அத்துடன், அதிக சளியுடன் வேதனை மிக்க இருமல் தோன்றல், கடும் மூச்சுத் திணறல், இருமலுடன் காய்ச்சல் ஏற்படல், இருமும் போது இரத்தம் வரல், காரணமின்றித் தொடரும் இருமல் இருப்பின் மருத்துவரை நாடுவது சிறந்தது.



## அதிக உலர்வான காற்று அல்லது ஈரலிப்பான காற்று

கடும் உலர்வான பகுதியில் இருக்கும் போதோ அல்லது ஈரலிப்பான பகுதியில் இருக்கும் போதோ இருமல் ஏற்படுவது வியப்புக்குரிய விடயம் அல்ல. இந்த நிலைமையைக் கட்டுப்படுத்திக் கொள்ள முயலுங்கள். குளிரூட்டி (AC) பாவனையைக் கட்டுப்படுத்துவதும் மற்றும் மின்விசிறியைக் குறைப்பதும் இருமலைத் தவிர்க்க வழி அமைக்கும்.



மேற்கூறிய காரணங்கள் ஏதுமின்றி உங்களுக்கு தொடர்ச்சியாக இருமல் இருக்குமாயின் அதற்கு நீங்கள் நீண்ட காலம் பயன்படுத்தும் மருந்துகளும் காரணமாக இருக்கலாம். இத்தகையோர் மருத்துவரை நாடி சிகிச்சை பெறுவதே சிறந்தது.

(-இ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பூமி சுற்றாவிடின் என்ன ஆகும்?




பூமி மணித்தியாலத்திற்கு ஆயிரம் மைல் வேகத்தில் தனது அச்சில் சுழன்று கொண்டிருக்கின்றது. இந்த சுழற்சி நின்றுவிட்டால், உலகில் என்ன நடக்கும் என்று சிந்தித்துள்ளீர்களா? அவ்வாறு நிகழ்ந்தால், நிலத்துடன் பொருத்தப்படாத உலகில் உள்ள அனைத்து விடயங்களும் மணித்தியாலத்திற்கு ஆயிரம் மைல் வேகத்தில் கிழக்குத் திசை நோக்கி தூக்கியெறியப்படும்.

அணுகுண்டைவிட பலம் வாய்ந்த கடும் காற்று வீச ஆரம்பிக்கும். ஒரு செக்கனில் 17 மைல் அளவு தரைப் பகுதியில் பெரும் சுனாமி பேரனர்த்தம் ஏற்படும்.

உலகம் சுழல்வதனை நிறுத்தி விடுவதனால் நாட்கள் கடப்பதும் நின்று விடும். ஆண்டுக்கு ஒரு முறைதான் சூரியன் உதிக்கும்; மேற்கில் உதித்து கிழக்கில் மறையும். பூமியின் சுழற்சியினால் ஏற்படும் மைய சக்தி காரணமாக, பூமத்திய ரேகையில் நீளவாக்கில் மேட்டு நில அமைப்பு தோன்றும். பூமியின் சுழற்சி நின்ற பின்னர் காலப் போக்கில் இந்த மேடு மறைந்து விடும். இந்நிலையில், பூமியிலுள்ள சமுத்திரங்களின் நீர், பூமியின் ஈர்ப்புச்சக்தி அதிகமுள்ள வட மற்றும் தென் துருவங்களை நோக்கிச் சென்றுவிடும். இதனால், பூமியின் மேலும் கீழும் பாரிய சமுத்திரங்கள் உருவாகி, மத்திய பகுதியில் பெரும் கண்டத் தொடர்ச்சி தோன்றும்.

அவ்வாறே, பூமியின் சுழற்சி நின்றுவிடுமானால், பூமியின் காந்தசக்தி படிப்படியாகக் குறையத் தொடங்கும். இந்த காந்த சக்தியே பூமிக்கு பாதிப்புகளை விளைவிக்கின்ற நச்சுக் கதிர்களிலிருந்து பூமியை பாதுகாக்கின்றது. எனவே, காந்த சக்தி குறையுமானால், பூமிக்கு பாதிப்பை ஏற்படுத்தும் கதிர்கள் அனைத்தும் நேரடியாக பூமியை நோக்கி வரும் ஆபத்து உள்ளது. இதனால், பூமியில் எந்த உயிரினமும் வாழ முடியாத நிலை ஏற்படும். ஆக, பூமி சுற்றுவது நின்று விடுவது என்பது உலக அழிவு அன்றி வேறில்லை.




உங்கள் அபிமான
தமிழ் Mirror
திங்கள் முதல் வெள்ளிவரை
விலை Rs. 10/=
தினசரி தேசிய பத்திரிகையாக
வெளிவருகிறது
wijeyanewspapers helping shape opinions
the SUNDAY TIMES
விஜய்
DailyMirror
தமிழ் Mirror www.tamilmirror.lk
விஜய நியூஸ் பேப்பர்ஸின் மற்றுமொரு தமிழ் வெளியீடு

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




ආයුබෝවන்
ஆயுபோவன்
**வணக்கம்**

**இன்றைய பாடத்தில் அம்மாவுக்கும் மகளுக்கும் இடையிலான உரையாடலைப் பார்ப்போம்.**

දුව: අම්මේ! මට මාලා අක්කලාගේ ගෙදර යන්න ඕනේ.
அம்மே! மட்ட மாலா அக்கலாகே கெதற யன்ன ஓனே.
மகள்: **அம்மா! எனக்கு மாலா அக்காவின் வீட்டுக்குப் போக வேண்டும்.**

අම්මා: ඒ මොකටද දුව?
ஏ மொகட்டத துவ?
அம்மா: **அது எதற்கு மகள்?**

දුව: නිවාඩු කාලයේදී ලියාගෙන එන්න කියලා රචනා වගයක් දුන්නා.
நிவாடு காலயேதீ லியாகென என்ன கியலா ரச்சனா வகயக் துன்னா.
மகள்: **விடுமுறை காலத்தில் எழுதிக்கொண்டு வரச் சொல்லி சில கட்டுரைகள் தந்தார்கள்.**

: මට රචනා ලියන්න අමාරුයි අම්මේ.
மட்ட ரச்சனா லியன்ன அமாருய் அம்மே.
: **எனக்கு கட்டுரைகள் எழுதக் கஷ்டம் அம்மா.**

අම්මා: ඔයා කොයි වෙලාවටද යන්නේ?
ஒயா கொய் வெலாவட்டத யன்னே?
அம்மா: **நீங்கள் எந்த நேரத்தில் போகிறீர்கள்?**

දුව: මම උදේ ගිහින් සවස එන්නම්.
மம உதே கிஹின் சவச என்னம்.
மகள்: **நான் காலையில் போய் பின்னேரம் வருகிறேன்.**

අම්මා: ඔයාට තනියම යන්න බැහැනේ දුව.
ஒயாட்ட தனியம யன்ன பெஹெனே துவ.
அம்மா: **உங்களால் தனியாக போக முடியாதே மகள்.**

දුව: මම උදේට තාත්තා එක්ක යන්නම්.
மம உதேட்ட தாத்தா எக்க யன்னம்.
மகள்: **நான் காலையில் அப்பாவுடன் போகிறேன்.**

: හවසට මාලා අක්කා එක්ක එන්නම්.
ஹவசட்ட மாலா அக்கா எக்க என்னம்.
: **பின்னேரம் மாலா அக்காவோடு வருகிறேன்.**

අම්මා: ඔයා මාලා අක්කාගෙන් ඇහැව්වා ද?
ஒயா மாலா அக்காகென் எஹெவ்வா த?
அம்மா: **நீங்கள் மாலா அக்காவிடம் கேட்டீர்களா?**

දුව: ඔව්. එයා එන්න කිව්වා.
ஒவ். எயா என்ன கிவ்வா.
மகள்: **ஆம். அவர் வரச் சொன்னார்.**

**பயிற்சி**

**இடைவெளிகளை நிரப்புக.**

1. ............. ලියන්න අමාරුයි.
2. කොයි ............. යන්නේ?
3. අක්කා එක්ක .................




**'Is' எனும் நிகழ்கால துணை வினைச்சொல் வினா வாக்கியத்தில் கையாளப்படும் முறை**

**'ing' சேர்ந்த வினைச்சொல் சகிதம் 'is' எனும் துணை வினைச் சொல்லைக் கையாண்டு அமைக்கப்பட்ட உடன்பாடு வாக்கியத்தை வினா வாக்கியமாக மாற்றும் முறை பற்றி இங்கே அவதானிப்போம்.**

அ) Your brother is drawing pictures.
உனது சகோதரன் படங்கள் வரைந்துகொண்டு இருக்கிறான்.
(உடன்பாடு வாக்கியம்-Affirmative Sentence)

**குறிப்பு: மேற்படி 'உடன்பாடு' நிலை வாக்கியத்தில் காணப்படுகின்ற 'is' எனும் துணை வினைச்சொல், அதே வாக்கியத்தின் முன்னிலையில் இடம்பெறுகின்றபோது, அவ்வாக்கியம் பின்வருமாறு 'வினா' நிலை வாக்கியமாக மாற்றமடைகின்றது.**

ஆ) Is your brother drawing pictures?
உனது சகோதரன் படங்கள் வரைந்துகொண்டு இருக்கிறானா?
(வினா வாக்கியம்-Interrogative Sentence)

★ Your brother is drawing.
உனது சகோதரன் வரைந்துகொண்டு இருக்கிறான்.

★ Is your brother drawing?
உனது சகோதரன் வரைந்துகொண்டு இருக்கிறானா?

★ **இவ்வாறே, ஏனைய வாக்கியங்களையும் அவதானிப்போம்.**

இ) Your sister is making coffee.
உனது சகோதரி கோப்பி தயாரித்துக்கொண்டு இருக்கிறாள்.
(உடன்பாடு வாக்கியம்-Affirmative Sentence)

ஈ) Is your sister making coffee?
உனது சகோதரி கோப்பி தயாரித்துக்கொண்டு இருக்கிறாளா?
(வினா வாக்கியம்-Interrogative Sentence)

★ Your sister is making.
உனது சகோதரி தயாரித்துக்கொண்டு இருக்கிறாள்.

★ Is your sister making?
உனது சகோதரி தயாரித்துக்கொண்டு இருக்கிறாளா?

★ ★ ★ ★

உ) Your mother is cooking lunch.
உனது தாய் பகலுணவு சமைத்துக்கொண்டு இருக்கிறார்.
(உடன்பாடு வாக்கியம்-Affirmative Sentence)

ஊ) Is your mother cooking lunch?
உனது தாய் பகலுணவுதான் சமைத்துக்கொண்டு இருக்கிறாரா?
(வினா வாக்கியம்-Interrogative Sentence)

★ Your mother is cooking.
உனது தாய் சமைத்துக்கொண்டு இருக்கிறார்.

★ Is your mother cooking?
உனது தாய் சமைத்துக்கொண்டு இருக்கிறாரா?

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை வெல்வதற்கு அர்ஜுனவின் ஆலோசனை...

இலங்கை கிரிக்கெட் அணியை தொடர்ச்சியான தோல்விகளிலிருந்து மீட்டெடுப்பதற்குரிய மாற்று வழிகளை கையாளுமாறு கோரி முன்னால் வீரரும், அமைச்சருமான அர்ஜுன ரணதுங்க ஜனாதிபதி அவர்களுக்கு கடிதமொன்றை அனுப்பி வைத்துள்ளார்.

தற்போதுள்ள நிர்வாகக் குழுவை கலைத்து இடைக்கால நிர்வாகக் குழுவொன்றை ஏற்படுத்தி புதிய தெரிவுக் குழுவொன்றையும் உருவாக்க வேண்டும் என குறிப்பிட்டுள்ளார். கிரிக்கெட் வீரர்களை உரிய வகையில் முகாமைத்துவப்படுத்தத் தெரியாதவர்களே, நிர்வாகக் குழுவில் உள்ளனர். வீரர்கள் உளவியல் ரீதியில் பலவீனப்பட்டுள்ளனர். விளையாட்டையும், பணத்தையும் ஒரே அளவையில் வைக்கக் கூடாது. விளையாட்டு வேறு, பணம் ஈட்டல் வேறு என்ற நோக்கமே அவசியமாகும். இத்தகைய சரியான பார்வையைக் கொண்ட ஒரு நிர்வாகக் குழுவை ஏற்படுத்துவதன் மூலமே, இலங்கை அணியை வெற்றியை நோக்கி அழைத்துச் செல்ல முடியும் என்றும் அவர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார்.



# தேசிய விளையாட்டுப் போட்டிகள்




இலங்கையின் 43 ஆவது தேசிய விளையாட்டுப் போட்டிகள் செப்டெம்பர் 22 தொடக்கம் 24 ஆம் திகதி வரை மாத்தறை கொட்டவில விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இதனையொட்டிய ஆரம்ப விழாவில் பிரதம அதிதியாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவர்கள் கலந்துகொள்ளவுள்ளார்.

இலங்கையின் முன்னாள் வீரர்களான காலியைச் சேர்ந்த சந்திமால் நிரோஷன மற்றும் தமரா சமன் தீப்பிக்கா ஆகியோர் ஆரம்ப விழாவின்போது, ஒலிம்பிக் தீபத்தை ஏற்றவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# உலக அணி பாகிஸ்தான் விஜயம்




பல்வேறு நாடுகளைச் சேர்ந்த வீரர்களைக் கொண்ட உலக கிரிக்கெட் அணியொன்று பாகிஸ்தான் செல்லவுள்ளது. இந்த அணி மூன்று T20 போட்டிகளில் பாகிஸ்தான் அணியுடன் போட்டியிடவுள்ளது. செப்டெம்பர் 12, 13 மற்றும் 15 ஆம் திகதிகளில் இப்போட்டிகள் நடைபெறும். உலக அணிக்கு தென்னாபிரிக்க அணியைச் சேர்ந்த டுபிளசிஸ் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

14 பேரைக் கொண்ட உலக அணியில் தொன்னாபிரிக்க வீரர்கள் 5 பேர், அவுஸ்திரேலிய வீரர்கள் 2 பேர், மேற்கிந்திய வீரர்கள் 2 பேர், இங்கிலாந்து, பங்களாதேஷ், நியூஸிலாந்து, இலங்கை ஆகிய அணிகள் சார்பாக தலா ஒரு வீரரும் இடம்பெற்றுள்ளனர்.



# உலக அணியுடனான போட்டி ஒத்திவைப்பு




செப்டெம்பர் 8 ஆம் திகதி நடைபெறவிருந்த உலக கிரிக்கெட் அணிக்கும் இலங்கை அணிக்கும் இடையிலான போட்டி திகதி குறிப்பிடப்படாமல் ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. இது தொடர்பான அறிவிப்பை இலங்கை கிரிக்கெட் சபையின் உயர்மட்ட அதிகாரியொருவர் வெளியிட்டுள்ளார்.

கடந்த மே மாதம் தொடக்கம் இலங்கை அணியினர் ஓய்வின்றி தொடர்ச்சியாக போட்டிகளில் பங்குபற்றி வந்துள்ளமையினால் வீரர்கள் உடல் உபாதைகளுக்கு உள்ளாகக்கூடிய சாத்தியங்கள் இருப்பதனாலும், அவர்களுக்கு தேவையான ஓய்வை வழங்குவதற்காகவுமே இவ்வாறு உலக அணியுடனான போட்டி காலவரையின்றி ஒத்தி வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

விஜய் ஸ்போர்ட்ஸ்

# ரகர் பயிற்றுனர்கள் நியூஸிலாந்து விஜயம்



இலங்கையைச் சேர்ந்த ரகர் பயிற்றுனர்கள் எட்டுப் பேர் நியூஸிலாந்தில் நடைபெறவுள்ள இரண்டு வாரகால பயிற்சி நெறியொன்றிற்கு அனுப்பப்படவுள்ளனர். ஒக்டோபர் மாதம் நடைபெறவுள்ள இந்த பயிற்சி நெறிக்கு தெரிவாகியுள்ள 8 பயிற்றுனர்களும் மேற்படி பயிற்சி நெறியின்மூலம் கற்றுக்கொள்கின்ற மேலதிக பயிற்சித் தகைமைகளை இலங்கையிலுள்ள ரகர் வீரர்களுடன் பகிர்ந்துகொள்ள வாய்ப்புக் கிட்டும் என கருதப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






# ஆரம்ப காலத்தில் இருந்து வாழ்ந்து வருகின்ற பழங்கு

ஏதேனுமொரு வலயத்தில் ஆரம்ப காலத்திலிருந்து வாழ்ந்து வருகின்ற மக்கள் குழுவினரே 'பழங்குடியினர்' என பொதுவாக அழைக்கப்படுகின்றனர். சுதேசிகள், பூர்வீக குடிகள் போன்ற பெயர்களாலும் இவர்கள் அழைக்கப்படுவர். ஆதிகாலம் முதல் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்ற தனித்துவம் மிக்க கலாசார லட்சணங்களை பழங்குடியினரிடையே காணலாம்.





## பழங்குடியினரின் பரவல்



தற்போதளவில் உலகின் 90 நாடுகளில் 370 மில்லியன் பழங்குடிகள் வாழ்ந்து வருவதாக தெரிவிக்கப்படுகின்றது. இத்தொகை உலக சனத் கையில் 5% ஆகும். இவர்கள் குறித்து மேற்கொள்ளப்பட்ட ஆய்வொன்றிற்கமைய, பழங்குடியினரில் 15% ஆனோர் மிகவும் வறிய நிலையில் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. உலகில் வாழும் பழங்குடிக் குழுக்களில் ஒவ்வொரு குழுவும் தனித்துவமான மொழிகளை பயன்படுத்துவதோடு, ஒவ்வொரு குழுவுக்குமென 5,000 இற்கும் மேற்பட்ட பல்வேறு கலாசார விழுமியங்கள் இருப்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

## உலக பழங்குடியினர் தினம்

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் பாதுகாப்பு மற்றும் அபிவிருத்தி குறித்த உப ஆணைக்குழுவின் கீழ் இயங்குகின்ற பழங்குடியினர் தொடர்பான செயலணியின் முதலாவது கூட்டம் 1982 ஆம் ஆண்டு ஓகஸ்ட் 09 ஆம் திகதி நடைபெற்றது. அதனை நினை கூரும் வகையில் 1994 ஆம் ஆண்டிலிருந்து ஓகஸ்ட் 09 ஆம் திகதியை 'உலக பழங்குடியினர் தினம்' என ஐக்கிய நாடுகள் சபை பிரகடனப்படுத்தியது.

## பழங்குடியினரின் உரிமைகள் குறித்த ஐக்கிய நாடுகள் பிரகடனம்

உலக பழங்குடியினர் குறித்து எடுக்கப்பட்ட மிகப் பயனுள்ளதும் முக்கியத்துவமானதுமான ஒரு நடவடிக்கையாக பழங்குடியினர் உரிமைகள் தொடர்பான ஐக்கிய நாடுகள் சபையின் பிரகடனத்தை குறிப்பிடலாம். 2007 ஆம் ஆண்டு செப்டெம்பர் 13 ஆம் திகதி ஐக்கிய நாடுகள் மாநாட்டில் வைத்தே, இப்பிரகடனம் உத்தியோகபூர்வமாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. பழங்குடியினருக்கும் ஐக்கிய நாடுகள் சபையில் அங்கம் வகிக்கும் நாடுகளுக்கும் இடையே ஒத்துழைப்பையும் ஒருமைப்பாட்டையும் ஏற்படுத்துவதே, இப்பிரகடனத்தின் நோக்கமாகும். அது தவிர; உலகளாவிய ரீதியில் பழங்குடியினரின் நல்வாழ்வு, கௌரவம், வாழ்க்கை நிலை என்பன இப்பிரகடனத்தின் மூலம் பலப்படுத்தப்படுவதோடு; மனித உரிமை, அடிப்படைச் சுதந்திரம் ஆகிய விடயங்களில் பழங்குடியினரின் உரிமைகள் மென்மேலும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



டியினர்

## சூழலுடன் பிணைந்த சமூகம்

பழங்குடியினருக்கென்றே தனித்துவமான கலாசாரப் பண்பாட்டு விழுமியங்கள் பல உள்ளன. இவை அனைத்தும் சூழல் மற்றும் இயற்கையோடு சம்பந்தப்பட்டே நிலவுகின்றன. பழங்குடியினரின் நம்பிக்கைகள், வழிபாட்டு முறைகள், பழக்கவழக்கங்கள், சமூக விழுமியங்கள், பண்பாடுகள் என அனைத்தும் சூழலுக்கேற்றதாகவும் சூழலோடு பின்னிப் பிணைந்ததாகவுமே காணப்படுகின்றன. அத்துடன், தமது வாழ்வாதார விடயத்தில் சூழலில் உள்ள வளத்தை முறையாக பயன்படுத்துவதற்காக சட்டதிட்டங்கள் மற்றும் ஒழுக்க விதிமுறைகளை அவர்களே இயற்றி பின்பற்றி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## பாரம்பரிய அறிவுடன்கூடிய வாழ்க்கை முறை

பழங்குடியினர் தமக்கே உரித்தான உணவுமுறைகள், விவசாய முறைகள், காட்டு வளப் பயன்பாடு மற்றும் வனவிலங்கு வளத்தைப் பயன்படுத்தும் முறைகள், விதைகள் மற்றும் உணவுகளை நீண்ட காலத்திற்கு பாதுகாத்து வைக்கும் முறைகள், விலங்கு வேளாண்மை முறைகள், நோய்களுக்கான சிகிச்சை முறைகள், நீருள்ள இடங்களை தேடிக் கண்டுபிடித்தல், காலநிலை எதிர்வுகூறல் உள்ளிட்ட பல தேவைகளை தமது பாரம்பரிய அறிவினைக் கொண்டு நிறைவேற்றிக் கொள்கின்றனர். இந்த அறிவினை தமது முன்னோர்கள் வழியாக வாய்மொழிமூலமே அவர்கள் அறிந்துகொண்டுள்ளனர்.


## பழங்குடி மொழிகளின் முக்கியத்துவம்

பழங்குடியினரிடையே பேசப்படுகின்ற மொழி ‘பழங்குடி மொழி’ என அழைக்கப்படுகின்றது. இந்த மொழியானது, ஒரு பிரதேசத்தில் அல்லது ஒரு வலயத்தில் மட்டும் சிறுபான்மையாக வாழ்கின்ற பழங்குடியினரிடையே மட்டும் பேசப்படுகின்ற மொழி என்பதால், ‘சிறுபான்மை மொழி’ என்றும் அழைக்கப்படுகின்றது. தற்காலத்தில் உலகின் பல பாகங்களிலும் வாழ்கின்ற பழங்குடியினரிடையே பிரதான மொழிகளை பேசும் பழக்கமே உருவாகி இருக்கின்றது. இதனால், அவர்களுக்குரிய பழங்குடி மொழிகளை தக்க வைத்துக்கொள்வது மிகவும் சிரமமாக இருப்பதாகக் கூறப்படுகின்றது. அந்தவகையில், தற்காலத்தில் மிக விரைவாக அழிந்து வரும் மொழியாகப் பழங்குடி மொழிகள் காணப்படுகின்றன. எனவே, இது குறித்து உலக மக்களின் கவனத்தை ஈர்க்கும் பொருட்டு, ஐ.நா. சபையானது 2019 ஆம் ஆண்டை ‘பழங்குடியினரின் மொழிகள் குறித்த சர்வதேச வருடம்’ ஆகப் பிரகடனப் படுத்தியுள்ளது. (-அ)











## கலாசார பல்வகைமை

பழங்குடியினரின் கலாசார லட்சணங்கள், நம்பிக்கைகள், பழக்கவழக்கங்கள், பண்பாடுகள், மொழிகள் மற்றும் அவற்றுடன் தொடர்பான கவிதைகள், பாடல்கள், நடனங்கள் ஆகியவை மூலம் கலாசார பல்வகைமைகள் வெளிப்படுத்தப்படுகின்றன. ஒரு நாட்டின் தனித்துவம் மிக்க அடையாளத்திற்கும் இந்த கலாசார பல்வகைமை மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.

## இலங்கையில் பழங்குடியினர் வாழும் இடங்கள்

இலங்கையின் பழங்குடிகளாக ‘வேடர்கள்’ திகழ்கின்றனர். இவர்கள் தம்பான, ஹெனானிகல, பொல்லெபெத்த, நில்கல, ரத்துகல, மஹியங்கனை ஆகிய பிரதேசங்களில் வாழ்கின்றனர்.



## பழங்குடிகளின் பிரதான பிரச்சினைகள்

- உரிய அந்தஸ்தும் மதிப்பும் இல்லாமை.
- பாரம்பரிய நில உரிமையை இழக்கும் நிலை.
- அவர்களின் வாழ்விடத்தின் எல்லைகள் குறுகுதல்.
- வாழ்வாதார முறை இல்லாதுபோதல்.
- கலாசார நடவடிக்கைகளை தொடர்வதில் உள்ள சிரமங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு (Trcsl) 1991 இல 25 என்ற தொலைத்தொடர்பு சட்டத்தின்கீழ் நிறுவப்பட்ட நிறுவனமாகும். இது ஆரம்ப காலங்களில் தொலைத்தொடர்பு இயக்குநர் ஜெனரல் அலுவலகம் (ஜெனரல்) என்று அழைக்கப்பட்டது. தெற்காசிய பிராந்தியத்தின் முதலாவது ஒழுங்குபடுத்தும் சபை இதுவாகும். ஒழுங்குபடுத்தல் என்ற சொற்பிரயோகத்தினை இலங்கைக்கு முதன்முதலில் அறிமுகப்படுத்தி வைத்த நிறுவனமாக இந்த நிறுவனத்தினைக் குறிப்பிடலாம். இந்த நிறுவனம் இலங்கையில் அரச நிறுவனங்களின் ஒழுங்குபடுத்தும் செயற்பாட்டில் முக்கிய இடத்தினை வகிக்கின்றது. இந்நிறுவனம் தனது அதிகாரங்களையும், பொறுப்புகளையும் பொதுமக்களுக்காக, தயங்காமல் நிறைவேற்றுவதற்கு முன்னிற்கும் அரச நிறுவனமாகும். தொலைத்தொடர்பு துறையில் ஒழுங்குபடுத்தும் பணிகளை மேற்கொள்வது இந்த நிறுவனத்தின் பிரதான பணியாகும்.



# இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு



## நிறுவனத்தின் வரலாறு

கைத்தொலைபேசி தொடர்பாடல் பற்றிய உலகளாவிய வலையமைப்பினை (GSM) உலகுக்கு முதலாவதாக அறிமுகம் செய்த நாடாக, எமது நாடு வரலாற்றில் இடம்பெற்றுள்ளது. *1988* ஆம் ஆண்டு தொலைத்தொடர்பு சட்டத்தின் பிரகாரம் முதன் முதலில் கைத்தொலைபேசி அனுமதிப் பத்திரம் செல்டெல் நிறுவனத்திற்கு வழங்கப்பட்டது. இதன் மூலம் தனியார் துறையினரும் தகவல் தொலைத்தொடர்பு துறைக்குள் பிரவேசிக்கும் வாய்ப்புக் கிட்டியது. அந்தவகையில், *1990*ஆம் ஆண்டு முக்கியமான தொரு ஆண்டாகும். இந்த ஆண்டுதான் இந்நிறுவனத்திற்கு தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு, என்று பெயரிடப்பட்டது.

## வழங்கும் சேவைகள்

★ தகவல் தொடர்பாடல் பணிகளை அமுல்படுத்துவதற்குத் தேவையான அனுமதிப்பத்திரத்தினை வெளியிடல் மற்றும் பரிந்துரைத்தல்.

உதாரணம்: இலங்கையில் தகவல் தொடர்பாடல் முறையொன்றினை அமுல்படுத்துவதற்கு அனுமதிப்பத்திரத்தினை வெளியிடலும் அமைச்சருக்குப் பரிந்துரைத்தலும்.

★ தகவல் தொடர்பாடல் உபகரணங்களை இறக்குமதி செய்தல், விற்பனை செய்தல் மற்றும் புதுப்பித்தல்.

★ வானொலி தொடர்பாடல் கருவி பயன்பாடு மற்றும் அனுமதிப் பத்திரத்தினை வெளியிடல்.

★ தகவல் தொடர்பாடல் சேவைகளை மீண்டும் விற்பனை செய்வதற்கான அனுமதிப் பத்திரத்தினை வெளியிடல்.

★ பரீட்சைகளை நடத்துதல்.
உதா: புதிய வானொலி செயற்பாட்டாளர்களுக்கான சான்றிதழ் பரீட்சை.

★ நுகர்வோர் பாதுகாப்பு.
உதா: தகவல் தொடர்பாடல் குறித்து பகிரங்கமாக, மக்கள் கருத்துக்களைக் கேட்டறிதல்.

★ முகாமைத்துவம், கண்காணிப்பு மற்றும் ஆராய்வு.
உதா: முகாமைத்துவம் குறித்து ஆராய்தல் மற்றும் விசாரணை.

★ தகவல் தொடர்பாடல் செயற்பாட்டாளர்கள் மத்தியில் தகவல் தொடர்புப் பணிகளை அமுலாக்க சந்தை நிலவரங்களை சாதகமாக்குதல்.

## அபிவிருத்திப் பணிகள்



வலையமைப்பு விஸ்தரிப்பு மற்றும் புதிய சேவைகள் வழங்க அக்கறை கொள்ளல்.

★ விசேட நிகழ்ச்சிகளை ஆரம்பித்தல்.

★ சர்வதேச தொடர்பு.
உதா: சர்வதேச தொடர்புகளை முன்னேற்றுதல்.

★ நிதி ஒதுக்கீடு
உதா: அரச திறைசேரிக்கு நிதி வைப்பீடு

★ கல்வி வசதி
உதா: நூலக வசதிகளை வழங்குதல்



## ஆணைக்குழுவின் பிரதான பொறுப்புகள்

★ அனுமதிப் பத்திரம் பெற்ற செயற்பாட்டாளர்களின் (தொடர்பாடல் நிறுவனங்கள்) அனுமதிப்பத்திர நிபந்தனைகளை அமுல்படுத்தல்.

★ அனுமதிபெற்ற செயற்பாட்டாளர்களுக்கிடையில் நீதியானதும் திடமானதுமான போட்டித்தன்மையை நடைமுறைப்படுத்த ஊக்கமளித்தல்

★ நுகர்வோருக்கு நீதியான கட்டணத்தினை உறுதிப்படுத்தல்.

★ நுகர்வோரின் பாதுகாப்பினை உறுதிப்படுத்தல்.

★ சர்வதேச சேவையினை அனைவருக்கும் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுத்தல்.

★ குறைந்த வசதி மற்றும் வரையறுக்கப்பட்ட வளங்களை ஒழுங்கு செய்தல்.

★ தரமான சேவைகளை தேவைக் கேற்ப நுகர்வோருக்கு வழங்குதல்.

★ சிவில் சமூகத்தினை புதிய தொடர்பாடல் தொழிநுட்பத்தினூடாகக் கட்டியெழுப்புதல்.

★ சர்வதேச தரத்திற்கு ஏற்ப தகவல் தொடர்பாடல் தொழிநுட்ப உபகரணங்கள் தொடர்பில் செயற்படல்.


## சுயாதீன பத்திரிகையாளராக வருவதற்கு ஒரு வாய்ப்பு



அன்பு வாசகர்களே...

உங்களுக்கு ஒரு சுயாதீன பத்திரிகையாளராவதற்கு ஆர்வம் இருக்கலாம். அதற்குண்டான பயிற்சிகள், உதவிகளை வழங்க நாம் தயாராக உள்ளோம். எனவே, உங்களுக்கு இதில் ஆர்வம் இருப்பின், உங்கள் விருப்பத்தை மாத்திரம் எமக்கு தெரியப்படுத்துங்கள்.

"நான் சுயாதீன பத்திரிகையாளராவதற்கு விரும்புகிறேன்" என்ற வார்த்தைகளை தபால் அட்டையில் குறிப்பிட்டு உங்களுடைய பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம் ஆகியவற்றைத் தெளிவாக குறிப்பிடவும்.

இது தொடர்பான சிறப்புக் கட்டுரை ஒன்று 2017/07/19 ஆம் திகதி விஜய் பத்திரிகையில் பிரசுரமாகியுள்ளது.

அனுப்ப வேண்டிய முகவரி: 'சுயாதீன பத்திரிகையாளர்'
'விஜய்'
த.பெ.இல 2037,
கொழும்பு.




noolaham.org | aavanaham.org




# இலங்கையர்களுக்கு வாக்குரிமை கிடைத்த விதம்

**1931**ஆம் ஆண்டு டொனமூர் அரசியலமைப்பு சீர்திருத்தத்தின் பிரதான உத்தேச யோசனையாக இலங்கைக்கு சர்வஜன வாக்குரிமை வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை முன்வைக்கப்பட்டது. 'சர்வஜன வாக்குரிமை' என்பது ஒரு குறிப்பிட்ட வயதினை எட்டும் போது பால் வேறுபாடின்றி அனைவருக்கும் வழங்கப்படும் வாக்களிக்கும் உரிமையாகும். வாக்குரிமை பற்றிய வரலாறு 1910ஆம் ஆண்டு 'குரு மக்கலம்' அரசியலமைப்பு வரை நோக்கி செல்கின்றது. அந்தவகையில், இலங்கையர்களுக்கு முதலாவது வாக்குரிமை அந்தஸ்து குரு மக்கலம் அரசியலமைப்பின் மூலம் கிடைத்திருந்தது. இது வரையறுக்கப்பட்ட உரிமையாக இருந்ததுடன், இதன் மூலம் நான்கு மந்திரிகள் தெரிவு செய்யப்பட்டனர்.




## வாக்குரிமை கிடைக்க வேண்டுமாயின்

1910ஆம் ஆண்டு வாக்குரிமையானது, ரூ 600க்கு மேற்பட்ட வருமானத்தினைக் கொண்டவர்களுக்கும், நகரத்தில் வசிக்கின்றவர்களாயின் வீட்டின் பெறுமதி 400 ரூபாவுக்கு அதிகம் கொண்டவர்கள், கிராமத்தில் வசிப்பவர்களாயின் அவ்வீட்டின் பெறுமதி ரூ 200க்கு அதிகம் கொண்டவர்கள், அசையா சொத்துக்களின் பெறுமதி ரூ 1500க்கு அதிகமாக கொண்ட ஆங்கிலம், தமிழ், சிங்களம் ஆகிய மூன்று மொழிகளில் ஒரு மொழியை பேசுபவர்களுக்கும், எழுதுபவர்களுக்கும், வாசிப்பவர்களுக்கும், சிரேஷ்ட கல்வித் தகைமை உள்ள 21 வயதுக்கு மேற்பட்ட ஆண்கள் ஆகியோருக்கே வாக்களிக்கும் தகுதி வழங்கப்பட்டிருந்தது. மேற்கூறப்பட்ட தகைமைகளின் படி, அப்பொழுது 50 லட்சமாக இருந்த நாட்டின் சனத்தொகையில் 2 லட்சம் பேருக்கே வாக்குரிமை கிடைத்திருந்தது.

## டொனமூர் அரசியலமைப்பின் கீழ் சர்வஜன வாக்குரிமை

1931ஆம் ஆண்டு டொனமூர் அரசியலமைப்பின் மூலம் சர்வஜன வாக்குரிமை அறிமுகம் செய்யப்பட்டதன் மூலம் அனைத்தும் மாறியது. இதன்படி, கல்வி மற்றும் சொத்துக்கள் ஆகிய வரையறைக்குட்படாத வாக்குரிமை இலங்கையர்களுக்கு கிடைத்தது. கீழ் வரும் நிபந்தனைகளின் அடிப்படையில் வாக்காளர்கள் தங்களை பதிவு செய்யநேர்ந்தது.

1. பிரித்தானிய பிரஜை
2. 21 வயது நிரம்பியவர்கள்
3. தேர்தல் இடம் பெறும் ஆண்டு ஒகஸ்ட் முதலாம் திகதிக்கு முன்னர் 18 மாதங்களில் 6 மாதங்கள் குறிப்பிட்ட தேர்தல் தொகுதியில் வசித்திருத்தல். (இதன் மூலம் முறைகேடாக வாக்காளராக பதிவு செய்தல் தடுக்கப்பட்டது)
4. குற்றச் செயல்களில் ஈடுபடாதவராக இருத்தல் அவசியமாக கருதப்பட்டது.

மேற்கூறப்பட்ட நிபந்தனைகளுக்கு மேலதிகமாக...

1. பிறப்பிலிருந்து இலங்கையில் வசிப்பவராக இருத்தல்.
2. ஏதோ ஒரு சொத்துக்கு உரிமையாளராக இருத்தல் மற்றும் கல்வித் தகைமை.
3. இலங்கையில் நிரந்தர குடியிருப்பாளர் என்ற உத்தரவாதப் பத்திரம் இருத்தல்.

ஆகிய தகைமைகளில் ஆகக் குறைந்தது ஒன்றினையாவது கொண்டிருத்தல் வேண்டும். இதன்படி பிறப்பிலிருந்து



இலங்கையில் வசிப்பவர்கள் என்ற நிபந்தனையின் கீழ் உள்நாட்டவர்களுக்கு வாக்குரிமை அளிக்கப்பட்டதுடன், இரண்டாவது நிபந்தனையின் மூலம் இலங்கையில் வசித்த ஐரோப்பியர்களுக்கு வாக்குரிமை கிட்டியது. மூன்றாவது நிபந்தனையின் மூலம் இலங்கையில் வசித்து வரும் இந்திய தோட்டத் தொழிலாளர்களுக்கு வாக்குரிமை உறுதி செய்யப்பட்டது.

## பெரும்பான்மை வாக்குப் பெற்றவர் மந்திரியாதல்

மேற்கூறப்பட்டவாறு வாக்குரிமை வழங்கப்பட்டவுடன் 21 வயதுக்கு மேற்பட்ட எழுத வாசிக்க பேசத் தெரிந்த 1000 ரூபாவை வைப்பிலிடக் கூடியவர்களுக்கு தேர்தலில் அபேட்சகராக போட்டியிட அனுமதிக்கப்பட்டது. அத்துடன், தேர்தல் பிரிவுகளை நிர்ணயிப்பதற்கென உள்நாட்டவர்களைக் கொண்ட ஆணைக்குழு ஒன்றை நியமிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டதுடன், எழுபதாயிரம் தொடக்கம் தொண்ணூறு ஆயிரம் வரை சனத்தொகைக்கு ஒரு மந்திரி சபை உறுப்பினர் என்று தீர்மானிக்கப்பட்டது.

## சர்வஜன வாக்குரிமை நிராகரிப்பு

1931ஆம் ஆண்டு டொனமூர் அரசியலமைப்பின் மூலம் இலங்கையர்களுக்கு வாக்குரிமை வழங்கப்பட்டமையானது, இலங்கையின் எதிர்கால அரசியல் வளர்ச்சிக்கு பெரும் உந்துசக்தியாக அமைந்திருந்தது. பிரித்தானிய காலனித்துவ ஆட்சியில் வாக்குரிமையைப் பெற்ற முதலாவது நாடாக இலங்கை திகழ்ந்தமை சிறப்பம்சமாகும். பிரித்தானியாவில் பெண்களுக்கு 1928ஆம் ஆண்டு வாக்குரிமை அளிக்கப்பட்டது. இதன்படி, பிரித்தானியாவில் சர்வஜன வாக்கெடுப்பு முறை அமுலாக்கப்பட்டு மூன்று ஆண்டுகளின் பின்னர் இலங்கைக்கு சர்வஜன வாக்குரிமை வழங்கப்பட்டதன் மூலம் ஏனைய காலனித்துவ நாடுகளை விட, இலங்கையில் அரசியல் முன்னேற்றம் சிறந்த முறையில் காணப்பட்டது என்பதனை அறிய முடிந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவர் கழகம்





ஜுசுவர் முகமட்,
அல்-மதீனா மகா வித்தியாலயம்,
குருநாகல்,
அங்.இல: 6184



ரூபிகா அருந்தவம்,
யா/புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்,
யாழ்ப்பாணம்.
அங்.இல: 6188



எம்.எஃப்.எம்.யூசுப்,
அஸ்-ஸம்ஸ் முஸ்லிம் வித்தியாலயம்,
நிவ எல்பிடிய.
அங்.இல: 6185



என்.எம்.நிஸாத்,
தி/கிண்ணியா அல் அக்ஸா கல்லூரி,
திருகோணமலை.
அங்.இல: 6189



இ.தனுசா,
யா/பண்ணாகம் மெய்கண்டான் மகா வித்தியாலயம்,
யாழ்ப்பாணம்.
அங்.இல: 6190



எம்.சுஹைல்,
திரித்துவக் கல்லூரி,
கண்டி.
அங்.இல: 6186



என்.எம்.நப்லான்,
பு/விருதோடை முஸ்லிம் மகா வித்தியாலயம்,
புத்தளம்.
அங்.இல: 6191



எம்.நஸ்ஹத்,
புனித அந்தோனியார் கல்லூரி,
கண்டி.
அங்.இல: 6187



பூ.கீர்த்தனா,
யா/மெதடிஸ் உயர் பாடசாலை,
யாழ்ப்பாணம்.
அங்.இல: 6192

## மாணவர் கழகம்

விஜய் மாணவர் கழகத்தில் இணைய விரும்புகின்றீர்களா? அப்படியாயின் அருகேயுள்ள கூப்பனை நிரப்பி உங்களின் புகைப்படத்துடன் தபால் அட்டையில் ஒட்டி அனுப்பி வையுங்கள்

அனுப்ப வேண்டிய முகவரி
'விஜய்' மாணவர் கழகம்
த.பெ.இல 2037
கொழும்பு

பெயர் : ..................................................
..................................................
முகவரி : ..................................................
..................................................
..................................................
பாடசாலை: ..................................................
..................................................
வகுப்பு : ..............................
திகதி: ..............................

புகைப்படத்தை இங்கே ஒட்டவும்

.............................
பெற்றோர் கையொப்பம்

---


## மேல் மாகாண கலை, கலாசார அமைச்சு நடாத்தும்

# புதுமுக எழுத்தாளர் போட்டி – 2017

ஊடக அனுசரணை: விஜய்

மேல் மாகாண புதுமுக எழுத்தாளர்களை ஊக்குவிக்கும் நோக்கில் இலக்கியப் போட்டியொன்றை நடாத்த மேல் மாகாண கலை, கலாசார அமைச்சு திட்டமிட்டுள்ளது. கொழும்பு, களுத்துறை, கம்பஹா ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த நிரந்தர வதிவாளர்கள் இதில் கலந்துகொள்ள முடியும். புதுமுக எழுத்தாளர் என்ற ரீதியில் தமது பெயரில் இதுவரை எந்தவோர் ஆக்கத்தையும் பிரசுரிக்காதவராக இருத்தல் வேண்டும்.

1. புதுமுக எழுத்தாளருக்கான நாவல் போட்டி
   (20,000 முதல் 25,000 சொற்கள் வரை)
2. புதுமுக எழுத்தாளருக்கான சிறுகதைப் போட்டி
   (750 முதல் 1,000 சொற்கள் வரை)
3. புதுமுக எழுத்தாளருக்கான மரபுக் கவிதைப் போட்டி
   (40 முதல் 60 வரையிலான வரிகள்)
4. புதுமுக எழுத்தாளருக்கான புதுக்கவிதைப் போட்டி
   (40-60 வரிகள்)
5. புதுமுக பாடலாசிரியருக்கான போட்டி
   (பாடுவதற்கு தகுந்த சொற்களின் எண்ணிக்கை)

### விபரங்களும் நிபந்தனைகளும்

01. போட்டியாளர் ஒருவர் ஒரு போட்டிக்காக ஒரேயொரு ஆக்கத்தையே சமர்ப்பிக்கலாம். எனினும், அவர் ஒன்றுக்கு மேற்பட்ட போட்டிகளில் கலந்துகொள்ள முடியும்.
02. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி திகதியில் விண்ணப்பதாரி 16-25 வயதிற்கு இடைப்பட்டவராக இருத்தல் வேண்டும்.
03. சகல ஆக்கங்களும் சுய ஆக்கமாக இருத்தல் வேண்டும். வேறோர் ஆக்கத்தில் இருந்து எடுக்கப்பட்டதாகவோ, ஒத்ததாகவோ, தழுவலாகவோ இருக்கக்கூடாது. அத்துடன், இதற்கு முன்னர் வெளிவராத ஆக்கமாகவும் இருத்தல் வேண்டும்.
04. சகல விண்ணப்பப் படிவங்களுடனும் கிராம உத்தியோகத்தரிடம் பெற்றுக் கொண்ட வதிவிட சான்றிதழ்/ உறுதிப்படுத்தப்பட்ட பிரதி இணைக்கப்படல் வேண்டும்.
05. சகல ஆக்கங்களும் A4 தாளில் ஒருபக்கம் மாத்திரம் தெளிவான கையெழுத்தில் எழுதப்பட்டதாகவோ அல்லது கணினி தட்டச்சு செய்யப்பட்டதாகவோ இருத்தல் வேண்டும். தேவைக்கேற்ப தாள்களை இணைத்துக்கொள்ளலாம்.
06. சகல ஆக்கங்களுடனும் விண்ணப்பப் படிவம் இணைக்கப்படல் வேண்டும். போட்டியாளரை இனங்காணும் விதத்தில் எவ்வித அடையாளங்களும் ஆக்கங்களிலோ, பிரதிகளிலோ இருக்கக்கூடாது.
   (மாதிரி விண்ணப்பப் படிவம் அருகே வழங்கப்பட்டுள்ளது)
07. ஒவ்வோர் ஆக்கமும் வெவ்வேறாக அனுப்பப்படல் வேண்டும்.
08. ஆக்கங்களை அனுப்பும்போது, மூல ஆக்கத்தை அல்லது அதன் மூன்று பிரதிகளை அனுப்பவேண்டும். தெரிவுசெய்யப்படாத ஆக்கங்களின் பிரதிகள் மீள் அனுப்பப்பட மாட்டா.
09. ஆக்கங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி 2017 ஒக்டோபர் 15. குறித்த தினத்திலோ அல்லது அதற்கு முன்போ கிடைக்கும் வகையில் கீழ் காணும் முகவரிக்கு ஆக்கங்களை பதிவுத் தபாலில் அனுப்ப வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் போட்டியின் பெயர் எழுதப்படல் வேண்டும்.



முகவரி: மேல் மாகாண புதுமுக எழுத்தாளர் போட்டி 2017
செயலாளர்
கலாசார, கலை அலுவல்கள் அமைச்சு,
மேல் மாகாணம்,
இல:89, ரன்மகபாய, பத்தரமுல்லை.

10. மேல் மாகாண புதுமுக எழுத்தாளர் போட்டி சம்பந்தமாக நடுவர்களின் தீர்ப்பே இறுதித் தீர்மானமாகும்.

### மேல் மாகாண புதுமுக எழுத்தாளர் போட்டி 2016

01. போட்டியின் பெயர்: ..............................
02. மொழி மூலம்: ..............................
03. போட்டியாளரின் முழுப் பெயர்: ..............................
04. புனைபெயர்: ..............................
05. நிரந்தர முகவரி: ..............................
06. மாவட்டம்: ..............................
    பிரதேச செயலகப் பிரிவு: ..............................
07. பிறந்த திகதி: ..............................
    அடையாள அட்டை இலக்கம்: ..............................
08. 2016.10.31இல் வயது: ..............................
    வருடம்: .............. மாதம்: .............. தினங்கள்: ..............
09. பால்: ..............
10. பாடசாலை அல்லது தொழில்புரியும் இடம்: ..............................
    ..............................
11. தொலைபேசி இலக்கம்: ..............................
    மின்னஞ்சல் முகவரி: ..............................
12. இதற்கு முன் உங்கள் பெயரில் ஆக்கமேதும் வெளியாகி உள்ளதா?
    ..............................
13. ஆக்கத்தின் பெயர்: ..............................
14. ஆக்கத்தில் அடங்கியுள்ள வசனங்கள் அல்லது வரிசைகளின் எண்ணிக்கை: ..............................
15. மூன்று பிரதிகளில் முன்வைத்தீர்களா? ..............................
16. உங்களின் சுய ஆக்கமா? ..............................
17. உங்களை இனங்காணும் ஏதேனுமோர் அடையாளம் உங்கள் ஆக்கத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளதா? ..............................
18. மேல் மாகாணத்தில் நிரந்தரவதிவாளரான கால எல்லை: ..............................
19. கிராம உத்தியோகத்தரின் வதிவிட உறுதிச் சான்றிதழ் இணைக்கப்பட்டுள்ளதா? ..............................

மேற்குறித்த விபரங்கள் அனைத்தும் உண்மை எனவும் சரியானதெனவும் உறுதிப்படுத்துகிறேன். இப்போட்டிகளில் நடுவர்களின் தீர்ப்பே இறுதித் தீர்மானம் என ஏற்றுக்கொள்கிறேன்.

திகதி: 2017..............................    போட்டியாளரின் கையொப்பம்
..............................


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கைவேலை



## தென்னம் ஓலை ஆபரணங்கள்

பச்சையான தென்னம் ஓலையைக் கொண்டு சிறுவர்களுக்கான ஆபரணங்களைச் செய்யும் முறை பற்றி இங்கு அறிவோம்...

**தேவையான பொருட்கள்**
*பச்சையான தென்னம் ஓலை*
*கத்திரிக்கோல்*

**செய்முறை**




முதலில் தென்னம் ஓலைகளில் இருக்கும் ஈக்கினை நீக்க வேண்டும்.



பின்னர் உங்களுக்கு வேண்டிய அளவுகளில் தென்னம் ஓலைகளை வெட்டி எடுக்கவும்.



வெட்டிய ஓலைகளின் இரு முனைப்பகுதிகளையும் படத்தில் காட்டப்பட்டுள்ளவாறு வெட்டி நீக்கப்பட்ட ஈக்கினைக் கொண்டு இணைக்கவும்.



பின்னர் படத்தில் உள்ளவாறு முனைப்பகுதியுடன் நீண்ட தென்னம் ஓலைகளில் கோர்த்துவிடவும்.



இப்போது அழகிய தென்னம் ஓலை ஆபரணங்கள் தயார்.

*வழங்குபவர்*
**கிண்ணியா ஏ. றம்ஸான்**

## தையல் சிட்டு



சூழலில் விழுந்துள்ள அகன்ற இலைகளையும் காய்ந்த நார்களையும் கொண்டு தைத்துக் கூடுகளை அமைக்கும் பறவைதான் 'தையல்சிட்டு' ஆகும். இப்பறவைகள் சிறிய வட்ட வடிவ சிறகுகளையும், உறுதியான கால்களையும், நீண்டு வளைந்த அலகையும் கொண்டு காணப்படும். செங்குத்தான இதன் வால் தனித்தன்மையானது. இப்பறவையானது, ஆங்கிலத்தில் Tailorbird என குறிப்பிடப்படுகின்றது.



தையல் சிட்டு அமைக்கும் கூட்டின் வெளிப்புறத் தோற்றம்

## எதிர் வெப்ப விரிவு



பொதுவாக, எல்லாப் பொருட்களும் வெப்பத்தால் விரிவடையும். ஆனால், கொம்ப்யூட்டர் சிப்களைத் தயாரிக்கப் பயன்படும் சிலிகானும் ஜெர்மானியமும் மிகவும் குளிரான நிலையில்தான் விரிவடைகின்றன. இதற்கு 'எதிர் வெப்ப விரிவு' (Negative Thermal Expansion) என்று பெயர்.


வீட்டில், சுற்றுப்புறத்தில், பாடசாலையில் மின்சார அனர்த்தங்கள் ஏற்படக்கூடிய சந்தர்ப்பங்கள் தொடர்பாக நீங்கள் அறிவீர்களா? மின்சார அனர்த்தங்களிலிருந்து தற்காத்துக்கொள்வதற்கு நாம் அனைவரும் தெளிவைப் பெறல் வேண்டும். அத்துடன், அவற்றை தவிர்ப்பதற்கும், அவற்றிலிருந்து பாதுகாப்பு பெறுவதற்கும் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியதும் நம் அனைவரதும் கடமையாகும்.

மின்சார அனர்த்தங்களை தவிர்ப்போம்

விஜய்

நாடளாவிய சுவரொட்டி ஓவியம், கட்டுரை, குறுந்திரைப்படப் போட்டி

மின்சார அனர்த்தத்தை பிரதிபலிக்கச் செய்கின்ற அல்லது அதிலிருந்து பாதுகாப்புப் பெறுவது தொடர்பான எந்தவொரு கருத்தையும் கொண்டதாக படைப்பு அமையலாம்.

பணப்பரிசில்களையும், பெறுமதியான சான்றிதழ்களையும் வெல்லுங்கள்.



சுவரொட்டிப் போட்டி

தரம் - 6, 7, 8, 9, 10-11 பிரிவுகளின் கீழ் நடைபெறும்.
முதலாவது இடத்திற்கு - ரூபா 20,000
இரண்டாவது இடத்திற்கு - ரூபா 15,000
மூன்றாவது இடத்திற்கு - ரூபா 10,000
ஒவ்வொரு போட்டிப் பிரிவிலிருந்தும் மாகாண அடிப்படையில் சிறந்த 3 படைப்புக்கள் தெரிவுசெய்யப்படுவதுடன், 135 படைப்புக்களுக்கு பணப்பரிசுகளும் வழங்கப்படும். ஒவ்வொரு பிரிவிலிருந்தும் மாகாண மட்டத்தில் தெரிவாகும் 450 படைப்புக்களுக்கு பெறுமதிவாய்ந்த சான்றிதழ்கள் வழங்கப்படும்.

குறுந்திரைப்படப் போட்டி

பகிரங்க (திறந்த) போட்டியாக நடைபெறுவதுடன், சிறந்த 10 படைப்புக்கள் தெரிவு செய்யப்படும்.
முதலாவது பரிசு ரூபா 50,000
இரண்டாவது பரிசு ரூபா 35,000
மூன்றாவது பரிசு ரூபா 20,000
மிகுதி ஏழுபேருக்கு தலா ரூ 10,000 வீதம் பணப்பரிசு வழங்கப்படும்.

கட்டுரைப் போட்டி

தரம் - 6, 7, 8, 9, 10-11 பிரிவுகளின் கீழ் நடைபெறும்.
முதலாவது இடத்திற்கு - ரூபா 20,000
இரண்டாவது இடத்திற்கு - ரூபா 15,000
மூன்றாவது இடத்திற்கு - ரூபா 10,000
ஒவ்வொரு போட்டிப் பிரிவிலிருந்தும் மாகாண அடிப்படையில் சிறந்த 3 படைப்புக்கள் தெரிவுசெய்யப்படுவதுடன், 135 படைப்புக்களுக்கு பணப்பரிசுகளும் வழங்கப்படும். ஒவ்வொரு பிரிவிலிருந்தும் மாகாண மட்டத்தில் தெரிவாகும் 450 படைப்புக்களுக்கு பெறுமதிவாய்ந்த சான்றிதழ்கள் வழங்கப்படும்.

போட்டி விதிமுறைகள்

- அவ்வவ் தலைப்பின்கீழ் ஒருவர் 3 படைப்புக்களை மாத்திரமே அனுப்ப முடியும்.
- சகல போஸ்டர்களும் 18X14 அங்குலம் அளவுடையதாக இருத்தல் வேண்டும்.
- 'பெஸ்டல்' அல்லது நீர்சாயம் போன்ற கையில் ஒட்டிவிடாத எந்தவொரு வர்ணப்பூச்சையும் பயன்படுத்த முடியும்.
- போட்டிக்கு அனுப்பப்படும் கட்டுரை 250 சொற்களுக்கு அதிகமாக இருத்தல் கூடாது.
- குறுந்திரைப்பட வீடியோ படைப்புக்கள் 5-10 நிமிடங்களுக்குள் அடங்குதல் வேண்டும். வீடியோவானது 500MB க்கு அதிகமாக இருத்தல் கூடாது. CD அல்லது DVD யில் அனுப்பலாம்.
- சித்திரம் மற்றும் கட்டுரைகளின் பின்புறம் போட்டியாளரின் பெயர், பாடசாலையின் பெயர், பாடசாலை முகவரி, பாடசாலைக்குரிய மாகாணம், மாவட்டம், வகுப்பு (தரம்), பிறந்த திகதி, வீட்டு முகவரி, தொலைபேசி இலக்கம், கையொப்பம் ஆகிய விபரங்களைக் குறிப்பிட்டு, பாடசாலை அதிபரின் அல்லது பிரிவுத் தலைவர் அல்லது வகுப்பு பொறுப்பாசிரியரின் உறுதிப்படுத்தல் அடங்கலாக இங்கு வழங்கப்பட்டுள்ள முகவரிக்கு தபாலிடுதல் வேண்டும். அல்லது நேரிலும் கையளிக்கலாம்.
- போட்டி நடுவர் குழுவின் முடிவே இறுதி முடிவாகும்.
- சகல படைப்புக்களும் போட்டியாளர்களின் பெயரின்கீழ் இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் விழிப்புணர்வு செயற்றிட்டங்களுக்கு உரித்துடையதாக்கப்படும்.

அனுப்ப வேண்டிய முகவரி



மின் விபத்துக்கள்,
'விஜய்'
த.பெ. இல 2037,
கொழும்பு.

மேலதிக விபரங்களுக்கு
எஸ். கிருஷாந்த் 0779900344

போட்டி ஏற்பாடு: இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு மற்றும் மின்சார தொழிற்றுறை தொழிநுட்ப பாதுகாப்பு ஒழுங்குறுத்துனர்


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

பருவவெளியீட்டுப்பகுதி
யாழ்ப்பாண பொதுநூலகம்





# வனக்குளியல்

மனதுக்கும் உடலுக்கும் புத்துணர்வு அளித்து, ஆரோக்கியத்திற்கு வழிவகுக்கும் ஒரு சிகிச்சை முறைதான் 'வனக்குளியல்' (Forest bathing) ஆகும். தாவரங்கள் அடர்ந்து வளர்ந்துள்ள வனப் பகுதியூடாக மேற்கொள்ளப்படுகின்ற நடைப்பயணத்தைத்தான் வனக்குளியல் என்கின்றனர்.

மரங்கள் வளர்ந்துள்ள வனப் பகுதியூடாகப் பயணிக்கும்போது, மனக்குழப்பங்கள் குறைந்து மனம் அமைதியடைகின்றது. அப்பகுதியில் வீசும் சுத்தமான காற்றை சுவாசிப்பதனூடாக, உடலுக்கு புத்துணர்ச்சி கிடைக்கின்றது. அத்துடன், இயற்கையாகவே தாவரங்கள், பூக்கள், காய்கள் மற்றும் பழங்களிலிருந்து Phytoncide எனப்படும் பெக்டீரியா எதிர்ப்புப் பதார்த்தம் வெளிப்படுகின்றது. இந்த பதார்த்தமானது, எமது மனதுக்கும் உடலுக்கும் ஆரோக்கியத்தை வழங்குவதோடு; நோய் எதிர்ப்புச்சக்தியை அதிகரித்தல், மன அழுத்தத்தைக் குறைத்தல் போன்ற பல்வேறு நலன்களையும் அளிக்க வல்லது. எனவே, வனக்குளியல் மேற்கொண்டால் இந்த நலன்கள் எல்லாம் கிட்டும் என ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.






## புரதம் அவசியம்

உடல் வளர்ச்சிக்கும் உடல் உறுதிக்கும் திசுக்களின் உருவாக்கத்திற்கும் புரதச்சத்து மிகவும் அவசியமாகின்றது. அதனால்தான் எமது உடலின் எடையில் ஒரு கிலோவுக்கு 0.8 கிராம் என்ற ரீதியில் புரதம் தேவைப்படுவதாக கூறப்படுகின்றது. எனவே, அன்றாட உணவு வேளைகளில் அவசியம் புரதச்சத்துள்ள உணவுகளை சேர்த்துக்கொள்ள வேண்டும். பருப்பு வகைகள், முட்டை, இறைச்சி வகைகள், பால் போன்றவை புரதச்சத்து அதிகமுள்ள சில உணவுகளாகும்.



## சுவை மொட்டுகள்




எமது நாக்கில் சுமார் 10,000 சுவை மொட்டுகள் உள்ளன. நாக்கில் காணப்படும் நுண்புடைப்புகளிலேயே இவை அமைந்துள்ளன. பொதுவாக, ஒருவருடைய நாக்கிலுள்ள சுவை மொட்டுகள் இரண்டு வாரங்களுக்கு ஒரு தடவை மாற்றமடைகின்றன. எனினும், ஒருவரின் வயதைப் பொறுத்தே அந்த மாற்றம் நிகழ்கின்றது. நாக்கிலுள்ள சுவை மொட்டுகள்தான் உணவின் சுவை எவ்வாறு இருக்கின்றது என்பதை மூளைக்கு தெரியப்படுத்துகின்றன.



## விண்கற்களால் ஆபத்து ஏற்படுமா?



பூமி அவ்வப்போது விண் பொருட்களால் அச்சுறுத்தல்களை எதிர்நோக்கி வருகின்றது. பூமிக்கு ஆபத்தை ஏற்படுத்தக்கூடிய பொருட்களில் ஒன்றுதான் விண்கற்கள். விண்வெளியில் ஏராளமான விண்கற்கள் சூரியனை சுற்றி வருகின்றன. அவ்வப்போது பூமியை நோக்கி விண்கற்கள் வந்து விலகியும் சென்றுள்ளன. மேலும் சில பூமியில் விழுந்தும் உள்ளன. அளவில் சிறிய விண்கற்களும் பாரிய பாதிப்புகளை ஏற்படுத்தும். அத்தகைய விண்கல் தாக்கத்தினால் பூமியின் சில பகுதிகளில் பாரிய பள்ளங்களும் ஏற்பட்டுள்ளன. பெரிய விண்கற்கள் பூமியைத் தாக்கினால் பூமியில் வாழும் உயிரினங்கள் அழிந்துபோக வாய்ப்புள்ளது. இத்தகையதொரு விண்கல் தாக்கத்தினால்தான் ராட்சத டைனோசர்களின் அழிவும் இடம்பெற்றுள்ளதாக விஞ்ஞானிகள் சிலர் கருதுகின்றனர்.

இப்பத்திரிகை கொழும்பு -2, இல. 08, ஹுணுப்பிட்டிய குறுக்கு வீதி, விஜய நியூஸ்பேப்பர்ஸ் நிறுவனத்தினால் 2017, செப்டெம்பர் 06 ஆம் திகதி புதன்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Printed and Published by Wijeya Newspapers Ltd. No. 8, Hunupitiya Cross Road, Colombo - 02, on Wednesday September 06 , 2017.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பாதையைக் கடக்கும்போது...



பாதையை கடப்பதற்கு பாதசாரிகள் கடவையை மட்டும் பயன்படுத்துங்கள். அவ்வாறு கடப்பதற்கு முன்னர் சமிக்ஞை விளக்கை அவதானியுங்கள். பாதசாரிகள் கடவையின் அருகே சமிக்ஞை விளக்கு இல்லாதிருப்பின், அவ்விடத்தில் நின்று வீதியின் இரு பக்கங்களையும் அவதானியுங்கள்.

வாகனங்கள் அருகில் வரும்போது, பாதையைக் கடக்க முற்பட வேண்டாம்.

சற்றுத் தூரத்தில் வாகனம் வரும்போது பாதையைக் கடந்திடுங்கள் அல்லது பாதையோரமாக நின்றவாறு வாகனத்தை நிறுத்தும்படி கையினால் சைகை காட்டுங்கள். வாகனம் நிறுத்திய பின்னர் பாதையைக் கடந்து செல்லுங்கள்.

பாதையைக் கடக்கும்போது, கைத்தொலைபேசியில் உரையாடுவதை தவிருங்கள்.

விஜய் PLUS

## சுற்றாடலைப் பாதுகாப்போம்



சுற்றாடலுக்கு நன்மை அளிக்கும் செயற்பாடுகளை முன்னெடுத்து, சுற்றாடல் மாசடைவைத் தவிர்த்திடுங்கள்

## இலைகளால் உயிரினங்கள்



மாடு



வான்கோழி



கழுதை



கிளி



சிங்கம்



குருவி

- நுஸ்ஜீ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

01. படத்திலுள்ள மரத்தைவிட, உயரமாகத் தெரியும் பிராணி எது?

.................................................


02. சுளகு போன்ற காதுகளையுடைய் பிராணி எது?


.................................................

03. இங்கிருப்பவற்றில் வேகமாக ஓடும் பிராணி எது?
1. கரடி 2. சிங்கம் 3. சிறுத்தை

04. ஊர்ந்து செல்லக்கூடிய பிராணிகளைக் குறிப்பிடுக.

.......................................................................









★ 250g மீனும் ஒரு போத்தல் பாலும் வாங்க எவ்வளவு பணம் தேவை?

.............................................

★ இங்கிருப்பவற்றில் 'கடலுணவு' யாது?

.............................................

★ இங்குள்ள பழங்களைக் குறிப்பிடுக. .................................................

★ புரதம் மற்றும் கொழுப்பு அடங்கிய பானம் யாது?

.............................................

01. இங்கிருப்பவர்களைக் குறிக்கக்கூடிய பொதுச் சொல் யாது?
1. கால்பந்து வீரர்கள்
2. விளையாட்டு வீரர்கள்
3. ஒரே வீட்டுப் பிள்ளைகள்



02. படத்தில் அதிகமாகக் காணப்படுபவை;
1. துடுப்பு மட்டைகள் 2. பந்துகள்
3. தொப்பிகள்

03. பந்து விளையாட்டுடன் தொடர்புபடாத ஒருவர் இங்கு காணப்படுகின்றார். அவர் யார்?
1. டெனிஸ் வீரர் 2. கால்பந்து வீரர்
3. ஓட்ட வீரர்




01. இந்த வீட்டின் மேல் தளத்தில் காணப்படும் பெயர் குறிக்கப்பட்ட அறைகளைக் குறிப்பிடுக.

.................................................................

02. சமையலறை எங்கே உள்ளது?

.............................................


03. இந்த வீடு;
1. சாதாரண வீடு 2. மாடி வீடு 3. குடிசை

04. விருந்தினர்கள் வந்தால் வரவேற்று உபசரிக்கும் அறை எது?

.................................................... -ஜீநு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குறுக்கெழுத்துப் போட்டி: 256



### மேலிருந்து கீழ்

1. தாமரை.
2. நிறை - எதிர்ப்பதம்.
3. எரிபொருள் வகை ஒன்று.
4. நீண்ட காதுகளையுடைய சிறிய பிராணி.
6. கொடிய விஷம் கொண்ட பாம்பினமொன்று.
8. கோடு.

### இடமிருந்து வலம்


1. ஒன்றிற்கு மேற்பட்ட தொகையை குறிக்கும் சொல்.
2. கீச்சிடும்.
4. தடவை.
5. கீழ்த்தரம். (குழம்பியுள்ளது)
7. விரி- எதிர்ப்பதம். (மாறியுள்ளது)
8. கழனி.
9. ஆண் சிங்கம். (குழம்பியுள்ளது)


## குறுக்கெழுத்துப் போட்டி : 255

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ம[1] | யி | ல் | | பா[2] | சி[3] |
| ணி | ல் | அ[4] | | ர் | நீ[5] |
| | கு[6] | சி | னி | | ர |
| சா[7] | | டி | ட் | ரா | க[8] |
| ட் | | | ச[9] | | ம் |
| சி[10] | ன | ம் | | ஆ[11] | று |

## விஜய் அறிவுக்கு விருந்து

## படங்களுக்குரிய தமிழ் சொற்களை தருக







## பொருத்தமானவற்றுடன் இணையுங்கள்





## வேறுபட்ட உருவில் X அடையாளமிடுக



## '2' இன் மடங்குகளை வெற்றிடங்களில் எழுதுக





## அறிவுக்கு விருந்து (23.08.2017) விடைகள்












Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





தேசிய இளைஞர் மன்றத்தின் சுவர்ண சக்தி செயற்றிட்டத்திற்கு அமைவாக, ஜெயசக்தி இளைஞர் விளையாட்டுக் கழகம் செல்வபுர பொது மக்கள் இணைந்து அமைக்கவுள்ள நூலகத்துக்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு அண்மையில் அன்று ஹொப்டன் பழைய தொழிற்சாலை செல்வபுரப் பகுதியில் இடம்பெற்றது. இதில் லுணுகலை தேசிய இளைஞர் சேவை மன்றத்துக்குப் பொறுப்பான அதிகாரி மற்றும் ஹொப்டன் தோட்ட முகாமையாளர் உட்பட, அதிகாரிகள் பலர் சிறப்பு விருந்தினர்களாக கலந்துகொண்டனர்.


(தகவல்: ந.மலர்வேந்தன்)

விஜய் விழா உலா
த.பெ.எண் 2037
கொழும்பு



ரிமாஸா ரில்வான்,
பலாந்தொட்ட முஸ்லிம் வித்தியாலயம்,
நாவலப்பிட்டி.

# பறவைகளுக்கு ஆதார இனமாகிய பறக்கும் டைனோசர்கள்



டைனோசர் யுகத்தில் சிலவகை சிறிய டைனோசர்களுக்கு இறகுகள் இருந்ததாக ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர். இத்தகைய டைனோசர்கள் மிக நீண்ட பரிணாம வளர்ச்சியின் பின் அவற்றின் உடல் எடை குறைவடைந்து தமது உடலைச் சுமந்து பறக்க ஆரம்பித்தன. டைனோசர்கள் பூமியில் இருந்து அழிந்தபோது, எடை குறைந்த பறக்கும் இத்தகைய டைனோசர்கள் ஏதோ ஒரு வகையில் உயிர் தப்பிக் கொண்டன. ஏனைய மிகப் பெரிய இறகுகள் அற்ற டைனோசர்கள் அழிந்தன.

இத்தகைய அழிவுகளில் உயிர் தப்பிய 'கர்னிவர்ஸ்' எனும் சிறிய பறக்கும் டைனோசர் இனமே நீண்ட கால பரிணாம வளர்ச்சியின் பின்





கோழியாக பரிணாமம் அடைந்ததாக சில ஆய்வாளர்கள் கருதுகின்றனர். கோழிகள் மட்டுமல்ல அனைத்து பறவை இனங்களுக்கும் ஆதார இனம் பறக்கும் டைனோசர்கள்தான் எனவும் கூறுகின்றனர். அந்தவகையில், உலகில் பறவை ஆதார டைனோசர் இனங்கள் 48 இருந்ததாகவும் கருதப்படுகின்றது . இவற்றில் இருந்தே பல்வேறு வகையான பறவை இனங்கள் உருவாகின. தற்போது சூழலுக்கு ஏற்ப தம்மை வடிவமைத்து எம் கண்முன்னே நடமாடும் பறவைகளின் ஆதார இனம் பறக்கும் குட்டி டைனோசர்களே என ஆய்வாளர்கள் கூறுகின்றனர். இவற்றை Tiny Dinosaures என்றும் அவர்கள் செல்லமாக அழைக்கின்றனர்.




அனுப்ப வேண்டிய முகவரி:
கைவண்ணங்கள்
'விஜய்'
த.பெ.எண் 2037
கொழும்பு

என்.ஹமரா பேகம்,
தி/கிண்/ புஹாரி நகர் முஸ்லிம் வித்தியாலயம்,
முள்ளிப்பொத்தானை.





ச.தனுஸ் பிரபாத்,
இ/எம்பி/பரியோவான் ஆரம்பக் கல்விப் பிரிவு,
இறக்குவானை.

எல்.உதயன்,
ப/ஹாலி-எல தமிழ் மகா வித்தியாலயம்,
ஹாலி-எல.





முகமட் நிசாஜ்,
அல்-ஹுதா முஸ்லிம் மகா வித்தியாலயம்,
குருநாகல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org